வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.03.2023 திங்கட்கிழமை | இதழ் : 101 | பக்கங்கள் : 16




## யாழ்ப்பாணம், திருகோணமலை

# உள்ளூராட்சி வேட்பாளர் தெரிவு; அறிக்கை கோரினார் சம்பந்தன்!

மன்னார், மார்ச் 20

**உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான இலங்கை தமிழரசு கட்சியின் வேட்பாளர் தெரிவில் யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் நிகழ்ந்த குளறுபடிகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

அந்தக் கட்சியின் மூத்த தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் வலியுறுத்தலின் பேரிலேயே மன்னாரில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற மத்திய குழு கூட்டத்தில் இந்தக் குழு நியமிக்கப் பட்டது.

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் உள்ளூராட்சி வேட்பாளர்கள் தெரிவில் தனக்கு உடன்பாடு இல்லை

15

## யாழில் தொல்பொருள் திணைக்கள பணிமனைகள் எதுவும் இல்லையாம்!

### வரலாற்றை திரித்த கடற்படை இப்படி விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நெடுந்தீவிலுள்ள வெடியரசன் கோட்டைக்கு அருகிலுள்ள தமிழ் பௌத்த எச்சத்தின் வரலாற்றை திரிவுபடுத்தி, இலங்கை கடற்படை தகவல் பதாகை நாட்டியுள்ளது. அங்கு நாட்டப்பட்டிருந்த தகவல் பதாகையை யாரோ அகற்றி விட்டனர். யாழ்ப்பாணத்தில், தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிமனைகள் ஏதும் இல்லாத காரணத்தால் அறிவித்தல் பலகையை மீண்டும் அதே இடத்தில் வைக்குமாறு எமக்கு அறிவுறுத்தப்பட்டது என்று கடற்படை விளக்கம் கூறியுள்ளது.

வெடியரசன் கோட்டை 2007ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் தொல்பொருள் சின்னமாக அடையாளப் படுத்தப்பட் டுள்ளது. அதற்கு அருகில் சுமார் 50 மீற்றர்

15

## திருமலையிலும் நேற்று நிலநடுக்கம்!

கொழும்பு, மார்ச் 20

திருகோணமலை உட்பட நாட்டின் இரு பகுதிகளில் நேற்று அதிகாலை நிலநடுக்கங்கள் பதிவாகின என்று புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகப் பணிப்பாளர் அஜித் பிரேம தெரிவித்துள்ளார்.

15

## தமிழ்த் தேசிய கட்சிகளுடன் ஒற்றுமையாக பயணிப்போம்!

### தமிழரசின் மத்திய குழு தீர்மானம்



மன்னார், மார்ச் 20

தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணைந்து எதிர்காலத்தில் ஒற்றுமையாகப் பயணிப்போம். தமிழ் மக்களின் தீர்வுக்காக நாம் அனைவருடனும் இணைந்து பயணிப்போம் என்று தமிழரசு கட்சியின் மத்திய செயல்குழுவில் ஒன்றாக முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயல் குழு கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில்

15

## மாகாண சபை தேர்தலை நடத்த வலியுறுத்த முடிவு!

### இலங்கைத் தமிழரசு கட்சி

மன்னார், மார்ச் 20

மாகாணங்கள் ஆளுநர்களின் கீழ் இருக்கும் நிலையில் எமது தொல்லியல் சார் இடங்களும் பறிபோகின்றன. எனவே, மாகாண சபைத் தேர்தலை உடனே நடத்த வேண் டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் வலியுறுத்த தமிழரசு கட்சி முடிவு செய்துள்ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயல் குழு நேற்று மன்னாரில் கூடி யது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

குருந்தூர் மலை, வெடுக்குநாறி இப்போது கன்னியா, வெடியரசன் கோட்டை என தமிழ் மக்களின்

15

## உள்ளூராட்சி சபைகளின் காலம் நள்ளிரவுடன் நிறைவடைந்தது!

கொழும்பு, மார்ச் 20

நள்ளிரவுடன் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் நிறைவுக்கு வந்தது. எனினும், பொது மக்களுக்கு தொடர்ந்து சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த சபைகளின் பதவிக்காலம் கடந்த ஆண்டுடன் முடிவடைந்த நிலையில், மார்ச் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இந்நிலை யில், எல்பிட்டி பிரதேச சபை (ஒக்ரோபர் வரை சபையை தொடரலாம்) தவிர்ந்த ஏனைய 340 உள்ளூராட்சி

15

## அன்னை பூபதியின் நினைவுதினம் ஆரம்பம்!



மட்டக்களப்பு, மார்ச் 20

இந்திய படையினருக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் (பூபதி கணபதிப்பிள்ளை) 35ஆவது நினைவேந்தல் நேற்று ஆரம்பமானது.

அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமான நேற்றைய தினத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் மன்னாரில் நடைபெற்றது. இதனால், அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்திய பின்னரே

15

## சிறுமி மீது கூட்டு வன்புணர்வு; அலட்சியம் காட்டிய பொலிஸ்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

15 வயது சிறுமிக்கு வலுக்கட்டாயமாக மது பானத்தை பருக்கி, அவரை கூட்டாக வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவமனையில் பொலிஸார் சேர்ப்பிப்பதற்கு பதிலாக அவரின் தாயாரையே சேர்ப்பிக்குமாறு அனுப்பியுள்ளனர். நேற்றிரவு 8 வரை சிறுமி மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்படாத நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டது.

15

## இலங்கைக்கான கடன் ஐ. எம். எவ். முடிவு இன்று

கொழும்பு, மார்ச் 20

இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பான ஐ. எம். எவ்வின் இறுதி முடிவை இன்று திங்கட் கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) நிறைவேற்று சபை கூடி எடுக்கவுள்ளது.

இதனிடையே, ஐ. எம். எவ்வின் கடன் வழங்கும் முடிவு இலங்கைக்கு சாதகமாக இருக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நம்பிக்கை

15

## இந்திய கடற்படையால் 6 இலங்கை மீனவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 20

இந்தியாவின் தூத்துக்குடி கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆறு இலங்கை மீனவர்களை இந்திய கடற்படை நேற்று கைது செய்தது.

ஒரு படகில் சென்ற 6 மீனவர்களே நேற்று பிற்பகல் 2 மணியளவில் இவ்வாறு கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தூத்துக்குடி துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க தூத்துக்குடி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## 2048இல் வளமான நாடாக இலங்கையை மாற்றுவோம்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மார்ச் 20

2048 இல் வளமான நாடாக இலங்கையை மாற்றுவோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற 32ஆவது இன்ரறெக்ட் மாவட்ட மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப பிட்டார்.

கடந்த 7 மாதங்களில் அந்த நிலையை மாற்றி, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த எனது அணியினரால் முடிந்தது. இலங்கை இனியும் வங்குரோத்து

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவராக இருந்தவர் என். நடராஜன்.

அவர் எந்த விழாவில் கலந்துகொண்டாலும் தனது பேச்சை ஆரம்பிக்கின்றபோது மேடையில் இருக்கின்ற பிர முகர்களின் பெயர்களை தனித் தனியே பெயர், பதவி நிலை சொல்லி விளித்துப் பேசுவார். அத்தோடு நின்றுவிட்டால் பரவாயில்லை விழா மண்ட பத்தில் இருக்கும் தனக்குத் தெரிந்த பிரமுகர்களின் பெயர்களை எல்லாம் சொல்லி அவர்களையும் விளித்தே தனது பேச்சைத் தொடங்குவார். சில வேளைகளில் பல நிமிட நேரத்தை அதற்கு எடுத்து விடுவார்.

ஒருநாள் அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது, அப்படி ஏன் எல்லோரையும் பெயர் சொல்லி நேரத்தை வீணடிக் கிறீர்கள் என்று அவரிடமே கேட்டேன்.

அவர் சொன்னார், 'மரி யாதை கொடுக்க வேண்டிய வர்களுக்கு நாம் கொடுத்தால் தானே மற்றவர்களிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய மரியாதையை எதிர்பார்க்கமுடி யும்' என்றார்.

சில மாதங்களுக்கு முன்னர், யாழ்ப்பாண கலாசார நிலையம் திறந்து வைக்கப்பட்டது - கடைசியாக நடந்த திறப்பு விழாவல்ல. அதற்கு முன்னதாக அலரி மாளிகையில் இருந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், இந்திய வெளிவிவகார அமைச் சர் ஜெய்சங்கரும் இணைந்து திறந்துவைத்தனர். அந்தத் திறப்புவிழாவுக்கு யாழ்ப்பா ணத்திலிருந்த முக்கிய பிரமுகர் கள் அனைவரும் அழைக்கப் பட்டு மண்டபத்தில் அமர்த்தப் பட்டிருந்த போதிலும் குறிப் பிட்ட நேரத்துக்கு அல்லாமல் நீண்ட காத்திருப்புக்குப் பின் னரே வைபவம் ஆரம்பமா னது. ஆனால், அந்தத் தாமதத்திற் காக ஒரு சிறிய வருத்தமும் தெரிவிக்கப்படவில்லை. மண்டபத்திலிருந்த யாழ்ப் பாணப் பிரமுகர்களுக்கு அவர் கள் வழங்கிய 'மரியாதை' அப்போது தெரியவந்தது.

அந்த வைபவம் முடிந்த பின்னர் இந்தப் பத்தியிலும் அது பற்றி எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்க லாம்.

அண்மையில், இந்திய குடியரசு தின வைபவம் அதே மண்டபத்தில் நடைபெற்ற போதும், முதல் வரிசையில் அதிவிசேட பிரதிநிதிகள் அமர வைக்கப்பட்டிருந்தனர். அந்த வரிசையில் கத்தோலிக்க குரு வானவரும்கூட அமர்ந்திருந் தார். அவர்கள் அருகே மாவிட் டபுரம் கந்தசுவாமி கோவில் குருக்களும் சென்று அமர்ந்தி ருந்தபோது, அவரை அணுகிய தூதரக அதிகாரி ஒருவர் அவரை பின் வரிசைக்கு அனுப்பி வைத்தார். அப்படி இவர் அங்கிருந்து பின் வரி சைக்கு அனுப்பப்பட்ட போது, யாரோ அதிவிசேட பிரமுக ருக்கு அந்த இடம் தேவைப் படுவதால் அவர் எழுப்பப் பட்டிருக்கலாம் என்று சமாதா னமடைந்து கொண்டபோதி லும் விழா முடிவடையும் வரை அந்த ஆசனம் காலியாகவே இருந்தது. அப்போதுதான், இந்துக்களுக்கு அதுவும் ஓர் இந்து மதகுருவுக்கு வழங்கப் பட்ட 'மரியாதை' வெளிச்சத்துக்கு வந்தது.

ஏன் இந்துக் குரு ஒருவருக்கு முன் ஆசனம் வழங்கப்பட வில்லை என்பது இன்றுவரை தெரியவில்லை.

ஒரு மேடையில் பிரமுகர் கள் அமர்ந்திருந்தால் அந்தப் பிரமுகர்களிடையே ஒரு தர வரிசை இருக்கும். அதில் யாருக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதில் எல்லோரும் அவதானமாக இருப்பார்கள்.

அந்த விழாவில் ஒருவர் பிரதம விருந்தினராக இருந்தா லும், விழாவை தொடக்கி வைக்கின்றபோது மங்கள விளக்கேற்றுவதாக இருக்கட் டும் அல்லது வாழ்த்துரையாக இருக்கட்டும் எதிலுமே மத குருக்களை முதன்மைப்படுத்து வதுதான் நமது மரபாக இருக் கின்றது.

அதிகம் ஏன் ஜனாதிபதி கலந்துகொள்கின்ற விழா என் றாலும்கூட மங்கள விளக் கேற்றுவதற்கு மதகுருக் களுக்கே முன்னுரிமை கொடுப் பார்கள்.

அண்மையில், யாழ்ப்பா ணத்தில் திருவள்ளுவர் சிலை திறப்புவிழா சிறப்பாக நடை பெற்றது.

விழாவில் ஆறு. திருமுருக னார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிலையை திரைநீக்கம் செய்து திறந்து வைத்தார். அந்த வைபவத்துக்கு - அதனை திறந்துவைக்க, பொருத்தமானவர் அவர் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது.

ஆனால், அந்த விழாவை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதற்கு மேடையில் இருந்த நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதல்வர் பலருக் குப் பின்னராகவே அழைக்கப் பட்டமை அங்கிருந்த அனை வரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

திறந்து வைக்கப்பட்ட திரு வள்ளுவர் சிலையில் - திருநீறு பூசியிருந்தமை பற்றி இன்று சமூக வலைத்தளங்களில் பட்டி மன்றம் நடத்திக் கொண்டி ருக்கின்றார்கள். அதனை இந்துத்துவ திணிப்பு என்றும் விமர்சிக்கிறார்கள். ஆனால், இந்துக்களின் - சைவர்களின் ஆன்மிகத் தலைவர்போல இன்று யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டிருக்கின்ற ஆதீனத்துக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை யாரும் கண்டுகொண்டதாகத் தெரிய வில்லை.!

இந்த இலட்சணத்தில் பௌத்தமும் கத்தோலிக்கமும் சைவத்தை அழிக்க முனைகின் றது என்று வேறு கூக்குரலிடு கின்றார்கள். சைவத்தை அழிக்க வேறு யாரும் தேவை யில்லை.!

- ஊர்க்குருவி

# நீதித் துறையுடன் ஜனாதிபதி விளையாட இடமளிக்கமுடியாது!

### சட்டத்தரணிகள் சங்கம் காட்டம்

கொழும்பு, மார்ச் 20

நீதிமன்ற தீர்ப்புக்கு நிறை வேற்று அதிகாரி கீழ்படாவிட் டால், சாதாரண மக்கள் கீழ்ப் படிவார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அத னால் நீதிமன்றத்துடன் விளை யாடுவதற்கு ஜனாதிபதிக்கு எங்களால் இடமளிக்க முடி யாது. இதற்கு எதிராக சட் டத்துறையினரான நாங்கள் அதற்கு எதிராக ஒரு சமூகமாக இருந்து குரல் கொடுக்க வேண் டும் என இலங்கை சட்டத் தர ணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத் தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மாத்தறை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று ஏற்பாடு செய்தி ருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிட் டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டத்தின் ஆதிக்கத்துக்கு எதிராக பாரிய பிரச்னைகள் தோன்றி வருகின்றன. இதில் நீதிமன்ற சுயாதீன தன்மைக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தடைகள், நாங்கள் காணும் பிரதான அச்சுறுத்தலாகும்.

நீதிமன்றத்தால் விடுக்கப் பட்டிருக்கும் சில கட்டளைக ளுக்கு கீழ்ப்படியாமல், நீதிபதி களை அழுத்தங்களுக்கு உட் படுத்த நிறைவேற்றுத்துறை முயற்சிக்கிறது. துறைசார் தொழில் வல்லுநர்கள் என்ற அடிப்படையில் அதற்கு நாங் கள் எதிராக செயல்பட வேண் டும். நீதிமன்ற சுயாதீனத் தன்மை தொடர்பில் நிறை வேற்றுத்துறை தலையிடுவ தற்கு நாங்கள் இடமளிக்க முடியாது.

நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும் போது அது தொடர்பில் வேறு முறைமைகளை கையாண்டு நீதிபதிகளை நோவினைப் படுத்த எங்களுக்கு இடமளிக்க முடியாது. நீதிமன்ற தீர்ப்பு களுக்கு நிறைவேற்றுத்துறை கீழ்ப்படியாவிட்டால், சாதா ரண மக்கள் நீதிமன்ற தீர்ப்புக் களுக்கு கீழ்ப்படிவார்கள் என எவ்வாறு நாம் எதிர்பார்க்க முடியும்?

அதனால், இது நிறைவேற் றுத்துறையால் மேற்கொள்ளப் படும் மிகவும் மோசமான முன்மாதிரியாகும். அதனால், நீதித்துறை சார்ந்தவர்கள் என்ற வகையில் நிறைவேற் றுத்துறையின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரி வித்து குரல்கொடுக்க வேண் டும். எதிர்வரும் ஒரு மாத காலத்துக்குள் அது தொடர் பில் தீர்மானிக்க வேண்டும்.

நீதிமன்ற நடவடிக்கையில் தலையிட வேண்டாம் என இது தொடர்பாக நிறை வேற்று அதிகாரிக்கு கடந்த வாரம் அறிவித்திருக்கிறோம். ஏனெனில், வரலாற்றில் எப் போதும் நிறைவேற்றுத்துறை முறைகேடாக நீதிமன்ற நட வடிக்கையில் தலையிடும் போது சட்டத்தரணிகள் சமூ கம் அதற்கு எதிராக உறுதி யாக செயல்பட்டிருக்கிறது. அதனால் நீதிமன்றத்துடன் விளையாடுவதற்கு நிறை வேற்று ஜனாதிபதிக்கு எங்க ளால் இடமளிக்க முடியாது - என்றார். (ஐ)

# தங்க முலாம் பூசிய முத்துக்களை முல்லைத்தீவில் விற்றவர் கைது!

முல்லைத்தீவு, மார்ச் 20

தங்கமுலாம் பூசப்பட்ட போலி முத்துக்களை விற் பனை செய்ய முயன்ற குற்றச் சாட்டின் கீழ் முல்லைத்தீவை சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலி ஓயா - ஜனகபுரத்தை சேர்ந்த 54 வயது சந்தேக நபரே இவ்வாறு நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி தங்கமுலாம் பூசப் பட்ட 1400 முத்து மணிகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக முல்லைத்தீவு நகரப்பகுதிக்கு கொண்டு வந் துள்ளார்.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபரை கைது செய்த முல்லைத்தீவு பொலிஸார் போலி முத்துக்களை மீட் டுள்ளதுடன் சந்தேக நபரை யும் சான்று பொருட்களையும் இன்று திங்கட்கிழமை முல் லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவ டிக்கை எடுத்துள்ளார்கள். (ஐ)

# ஈ. பி. டி. பி. வேட்பாளர்களுடன் அமைச்சர் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர்களை அந் தக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவா னந்தா நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் மண்டபம் ஒன்றில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் மாவட்டத் தின் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டி



யிடும் வேட்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தர் கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# 266 முன்னாள் எம். பிக்களுக்கு ஓய்வூதியம்வழங்கப்படுகின்றது

கொழும்பு, மார்ச் 20

ஓய்வூதியம் பெறும் பாராளுமன்ற உறுப்பி னர்களின் எண்ணிக்கை 266 ஆக அதிகரித்துள்ள தாக பாராளுமன்றம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் உயிரிழந்தமையால், அவர்களின் மனைவியருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்திற்காக ஆண்டுதோறும் செலவிடப் படும் தொகை சுமார் 15 கோடி ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, ஓய்வூதியம் பெறும் முன்னாள் பெண் பாராளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கை 15 ஆகும்.

இதேவேளை, முன்னர் பாராளுமன்ற உறுப்பி னர்களாக பதவி வகித்த 5 தேரர்களுக்கும் ஓய் வூதியம் வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
20.03.2023 திங்கட்கிழமை
ඊළනාඩු
பிலவ வருடம், பங்குனி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல்வாதிகள் தேர்தலுக்கு மட்டும்தானா?

உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற பின்னர்தான், ஏனைய தேர்தல்கள் நடைபெறுவதற்கான வாய்புகள் உண்டு. உள்ளூராட்சி தேர்தல் இல்லையென்றவுடன் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பலர் காணாமல் போய்விட்டனர். வாக்களித்த மக்கள் அவர்களில் பலரை தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கின்றது. உள்ளூராட்சி தேர்தலை முன்வைத்து தமிழ்த் தேசிய அரசியல் அரங்கில் பலவாறான விடயங்கள் இடம்பெற்றிருந்தன.

தேர்தலில் தனித்து போட்டியிடும் நோக்கில் இலங்கை தமிழரசு கட்சி - தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குத்துவிளக்கு சின்னத்தில் தொடர்ந்தும் இயங்குவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டது. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மணிவண்ணன் அணியுடன் இணைந்து தனியாக தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுத்தது. தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் கட்சிகள் உள்ளூராட்சி தேர்தலை முன்வைத்து நான்கு அணிகளாகக் களமிறங்கின. தேர்தல் வெற்றியை கருத்தில் கொண்டு நான்கு அணிகளும் பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன.

ஆனால், தேர்தல் நடைபெறாதென்னும் செய்தி வெளியானதைத் தொடர்ந்து அனைவருமே தங்களின் அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டனர். குறிப்பாக குத்துவிளக்கு சின்னத்தில் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒப்பீட்டடிப்படையில் அதிகமான கட்சிகளை உள்ளடக்கிய அணியாக இருந்த போதிலும்கூட, உள்ளூராட்சி தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்கள் பக்கத்திலிருந்து எந்தவொரு செயல்பாடும் முன்னெடுக்கப்படவில்லை. தமிழ்த் தேசிய கட்சிகளின் அரசியல் செயல்பாடு என்பது தேர்தலில் போட்டியிடுவது மட்டும்தானா?

உண்மையில், அரசியல் செயல்பாடுகள் என்பது தேர்தலுக்கு அப்பால்பட்டது. அரசியல் இயங்குநிலையில் ஒரு சிறிய பகுதிதான் தேர்தல். ஏனெனில், தேர்தல் அரசியல் ஆட்டங்கள் இரண்டு மாதங்களுக்குள் முற்றுப்பெற்றுவிடும். மக்களுடன் ஊடாடுவதும், அவர்களின் பிரச்னைகளை தீர்க்கும் நோக்கில் உள்ளுக்கும் வெளியிலும் தொடர்ந்து செயல்படுவதில்தான் ஒரு கட்சியின் அரசியல் ஆளுமை தங்கியிருக்கின்றது. ஆனால், நமது சூழலில் நடப்பதோ வேறு. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டவுடன், ‘மகுடிக்கு ஆடும் பாம்பு போல்’ ஆட்டம் போடும் கட்சிகளின் செயல்பாட்டாளர்கள் தேர்தல் முடிவுற்றவுடன் பெட்டிப்பாம்பாகி விடுகின்றனர். இந்தப் பின்னணியில் நோக்கினால், தமிழ்த் தேசிய கட்சிகளை எவ்வாறு வரையறுப்பது என்னும் கேள்வி எழுகின்றது. ஏனைய கட்சிகளுக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் குழப்பங்கள் உண்டு. 2004ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீட்டுச் சின்னத்தின் கீழ்தான் இயங்கியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்த மக்கள் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களித்திருந்தனர். உண்மையில் மக்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்தனரே தவிர, தமிழரசு கட்சிக்கு வாக்களிக்கவில்லை. அவர்கள் வாக்களித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு.

ஆனால், தற்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு குத்துவிளக்கு சின்னத்தின் கீழ் இருக்கின்றது. இந்த விடயங்கள் சரியாக மக்களை சென்றடையவில்லை. மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்கள் காணப்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்புள்ள கூட்டமைப்பின் அரசியல்வாதிகளோ, அடுத்த தேர்தல் திகதிக்காக வீடுகளில் காத்திருக்கின்றனர். ஆனால், இப்போது கூட்டமைப்பு எது?, தமிழரசு கட்சி எது? - என்று தெரியாமல் வாக்களிக்கும் மக்கள் குழம்பியிருக்கின்றனர். இதனை நிவர்த்தி செய்யும் வகையில், கூட்டமைப்பின் தலைவர்கள் மக்களை சந்திக்கவில்லை. உண்மையில், அவர்கள் தொடர்ந்தும் மக்களை சந்தித்திருக்க வேண்டும். தேர்தல் நடக்கலாம் - நடக்காமலும் போகலாம் - அது வேறு விடயம். ஆனால், மக்களுடனான அரசியல் சந்திப்புகள் தொடர வேண்டும். மக்கள் அணிதிரட்டப்பட வேண்டும். இது தொடர்பில் இனியாவது சிந்தித்தால் நல்லது.

# உள்ளூராட்சி தேர்தல் பின்சென்றால் எல்லை நிர்ணய பிரச்னை தோன்றும்!

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு எதிர் வரும் ஏப்ரல் 25ஆம் திகதி இடம்பெறுவதற்கான சாத்தியம் அரிதாகவே உள்ளது. பொது இணக்கப்பாட்டுடன் தேர்தலை மூன்று அல்லது நான்கு மாத காலத்துக்குள் நடத்த வேண்டும். தேர்தலை நடத்தாவிட்டால் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் முரண்பாடு தோற்றம் பெறும் என்று எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் கூறுகையில்,

தேர்தல் ஆணைக்குழு அறிவித்தபடி ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது. 340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ளது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அரச அதிகாரிகளினால் உள்ளூராட்சி மன்றம் நிர்வகிக்கப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு பல நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ளன. தேர்தல் தொடர்பில் சகல தரப்பினரும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்து ஒரு தீர்மானத்தை எடுத்து தேர்தலை வெகுவிரைவாக நடத்த வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே மேலதிகமாக ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் மன்றங்களின் பதவிக் காலத்தை மேலும் நீட்டித்தால், அது பாரிய முரண்பாடுகளை ஏற்படுத்தும். ஆகவே, ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும்.

ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி தேர்தலை நடத்த வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாவிட்டால் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் முரண்பாடுகள் தோற்றம் பெறும். தேர்தல் இல்லாமல் அறிக்கை சமர்ப்பித்தால் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தை எடுக்க நேரிடும். அந்த தீர்மானம் எத்தன்மையில் அமையும் என்பதை எதிர்பார்க்க முடியாது - என்றார். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலை நடத்த ரணிலுக்கு அதிகாரம் இல்லை!

## விஜித ஹேரத் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த வருடம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அதிகாரம் இல்லையென தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 40ஆவது சரத்தின்படி, ஐந்து ஆண்டுகளின் முழு பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு புதிய ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று அவர் செய்தியாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

அரசமைப்பின் 40 சரத்தின் உப பிரிவுகளின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு மட்டுமே இரண்டாவது முறையாக போட்டியிட்டால், முழு பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த அதிகாரம் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வருடம் நவம்பர் மாதத்துக்குப் பிறகு ஜனாதிபதித் தேர்தலை நடத்தியிருக்க முடியும் என்று கூறிய அவர், அடுத்த ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவுக்கு அத்தகைய அதிகாரம் இல்லை என்றும் கூறினார். எனவே, 2024 ஆம் ஆண்டு நவம்பருக்கு பின்னரே ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும் என்றும் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மட்டுவில் வளர்மதியில் உணவு திருவிழா நடந்தது


யாழ்ப்பாணம், மார்ச் 20

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய மாதர் சங்க உறுப்பினர்களின் ஏற்பாட்டில் உணவுத்திருவிழா நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்தத் திருவிழாவில், ஓய்வு பெற்ற அதிபரும், வளர்மதி கல்விக்கழக பொறுப்பாசிரியர் ச. கிருஷ்ணன், வளர்மதி சனசமூக நிலையச் செயலாளர் லக்ஸ மணசிறி, வளர்மதி வி.கழக தலைவர் அமல்ராஜ் உட்பட பலர் பங்கெடுத்தனர்.

உணவுத்திருவிழா நிகழ்வில் ஏராளமான பெண்கள் ஆர்வத்தோடு பங்குபற்றி தமிழர்களின் பராம்பரிய உணவுகள், தற்கால உணவு வகைகள் என அனைத்தும் தயாரிக்கப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டு விற்பனையும் இடம்பெற்றுது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 20 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 06
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்தர்ப்ப சூழ்நிலையை புரிந்து கொண்டு சமயோசிதமாக பேசும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் முடியும். பணம் கைக்கு வரும். புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடையும், தாமதங்களும் ஏற்படும். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கடகம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பண வரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். அரசு அதிகாரிகள் உதவியால் சிலகாரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணப் பற்றாக் குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தோர் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் இதுவரை இருந்த சலிப்பு சோர்வு கோபம் யாவும் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் அனைத்தும் முடியும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. கோபத்தால் பகை உண்டாகும். உங்கள் திறமையை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம்.

**கும்பம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகள் உணர்வுகளைப் புரிந்துகொள்ளுங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வியாபாரத்தில் லாபம் வரும்.

**மீனம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். பெற்றோர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

# கூட்டணி குறித்துப் பேச எனக்கு அதிகாரம் இல்லை!

## தமிழக பா. ஜ. க. தலைவர்

சென்னை, மார்ச் 20

கூட்டணி குறித்து பேச எனக்கு அதிகாரம் இல்லை. கூட்டணி குறித்து கட்சி மேலிடம்தான் முடிவு செய்யும் என்று கூறியுள்ளார் பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை.

பா. ஜ. கவின் தமிழக பணிமனையில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திராவிட கட்சிகளுடன் இணைந்து எந்தத் தேர்தலையும் சந்திக்க பா. ஜ. க. விரும்பவில்லை. கூட்டணி குறித்து மே மாதம் அறிவிக்கப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று அவர் செய்தியாளர்களுக்கு தனது உரை குறித்து விளக்கமளித்தார்.

“என்னுடைய கருத்து குறித்த டில்லி மேலிட தலைவர்கள் பலரிடமும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பேசி வருகிறேன். தமிழகத்தில் பணம் இல்லாத நேர்மையான அரசியலுக்கு வர வேண்டும்.

அரசியல் களத்தில் நேர்மை இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். பணம் இல்லாத அரசியலை முன்னெடுத்தால் மட்டுமே தமிழ்நாடு வளர்ச்சி அடையும். 2 ஆண்டுகளாக பா. ஜ. க. மாநில தலைவராக இருந்த அனுபவத்தில் பேசுகிறேன். இனி வரும் காலங்களில் மிகத் தீவிரமாக பேசவுள்ளேன். கூட்டணி குறித்து பேச எனக்கு அதிகாரம் இல்லை. கூட்டணி குறித்து கட்சி மேலிடம்தான் முடிவு செய்யும். எனது கருத்தில் 50 சதவீத பேருக்கு உடன்பாடும், 50 சதவீத பேருக்கு எதிர்கருத்தும் உள்ளது. ஆனால், என் நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருக்கிறேன்.” - என்றார். (ஐ)

# பொதுசெயலர் பதவிக்கு தேர்தல்; பழனிசாமி வேட்புமனு தாக்கல்!

சென்னை, மார்ச் 20

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிட கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தார். இதனிடையே, தேர்தலுக்கு தடை கோரி பன்னீர் செல்வம் தரப்பு உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

பழனிசாமி தரப்பினர் கடந்த ஆண்டு ஜூலை 11-ம் தேதி நடத்திய பொதுக்குழு கூட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து, பொதுச் செயலாளர் தேர்தலை நடத்துவதற்கான பணிகளை பழனிசாமி தரப்பினர் தொடங்கினர். இந்த நிலையில், மார்ச் 26ஆம் திகதி பொதுச் செயலாளர் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.



சென்னை - ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை பணிமனையில் வேட்புமனு தாக்கல் நேற்று காலை 10 மணிக்கு தொடங்கியது. கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளர் பழனிசாமி வேட்புமனு தாக்கல் செய்வதற்காக நேற்றுமுன்தினம் கட்சி பணிமனை வந்தார்.

வேட்புமனுவுக்கான கட்டணம் ரூ. 25 ஆயிரத்தை கட்சி நிர்வாகிகள் பலர் கூட்டாக வழங்க, வேட்புமனுவை பழனிசாமி பெற்றுக் கொண்டார். பின்னர், அதை பூர்த்தி செய்து, தேர்தல் ஆணையர்கள் நத்தம் விஸ்வநாதன், பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோரிடம் வழங்கினார்.

இதேவேளை, பொதுச் செயலர் பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்யும் திகதி முடிவடைந்த நிலையில் பழனிசாமி மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பா. ம. கவை வழிநடத்துவது யார்? தந்தை - தனயனிடையே முரண்!

சென்னை, மார்ச் 20

பா.ம.க., பொதுச் செயலராக அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க, அந்தக் கட்சி தலைவர் அன்புமணி வலியுறுத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பா. ம. க., இளைஞரணி தலைவராக இருந்த அன்புமணி, 2022 மே 28ஆம் திகதி கட்சி தலைவராக தெரிவானார்.

மகன் தலைவரான பின்னும், ராமதாஸ், வழக்கம்போல திண்டிவனம், தைலாபுரம் தோட்டத்தில் இருந்து கட்சியை நடத்தி வருகிறார். ஒன்றிய அளவிலான நிர்வாகிகளை கூட, அவரே நியமனம் செய்கிறார். இது அன்புமணியை அதிருப்தி அடைய செய்துள்ளதாக, அக்கட்சியினர் தெரிவிக்கின்றனர்.






இது தொடர்பாக, பா.ம.க., நிர்வாகி ஒருவர் கூறுகையில், “அன்புமணியிடம் ஆலோசிக்காமலேயே, ஜி.கே.மணியை கௌரவ தலைவராக ராமதாஸ் நியமித்து விட்டார். “அன்புமணியிடம் இருந்த இளைஞரணி தலைவர் பதவிக்கு, ஜி.கே.மணியின் மகன் தமிழ்க்குமரனை நியமித்தார். அன்புமணியின் கடும் எதிர்ப் பால், அவர் இராஜினாமா செய்ய வேண்டி வந்தது.

“அப்பா -மகன் இடையே நடக்கும் பனிப்போரால், யார் சொல்வதை கேட்பது என, கட்சி நிர்வாகிகள் குழப்பம் அடைந்துள்ளனர்“ என்றனர்.

இதேவேளை, வன்னியர்களையும், சிறுபான்மையினரையும் ஒருங்கிணைத்து வெற்றி பெறலாம் என ராமதாஸ் போட்ட கணக்கு, தமிழகத்தில் பொய்த்து விட்டது. தி.மு.க., - அ.தி.மு.க.,வை மீறி, சிறுபான்மையினரின் வாக்குகளை, பா.ம.கவால் பெற முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் அனுதாபம் மூலமே அதிகாரத்துக்கு வருகின்றனர்!

## இலங்கையின் நிலை இதுவே என்கிறார் சந்திரகுமார்!



கிளிநொச்சி, மார்ச் 20

இலங்கையைப் பொறுத்த வரை பெரும்பாலான பெண்கள் கணவன் அல்லது தந்தையின் மறைவுக்கு பின்னரான அனுதாபங்கள் மூலமே அரசியல் அதிகாரங்களுக்கு வந்துள்ளனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் பெண்களின் அரசியல் அதிகாரங்களுக்கு ஆளுமையின் ஊடாக பிரவேசிக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற சமத்துவக் கட்சியின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

உலகில் முதல் பெண் பிரதமரை உருவாக்கிய நாடு என நாம் பெருமைப்பட்டுள் கொள்கின்றோமே தவிர அரசியலில் பெண்களுக்கு போதுமான வாய்ப்புக்களை வழங்குவதற்கு இந்த நாடு இன்னமும் தயாராக இல்லை. ஒரு சில இஸ்ஸாமிய நாடுகளில் அரசியலில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்கள் போன்று கூட இலங்கையில் வழங்கப்படவில்லை என்பது கவலைக்குரியது.

இலங்கையின் வாக்காளர்களில் அதிகளவில் பெண் வாக்காளர்கள் உள்ள போது இந்த வாய்ப்பு மறுப்பு என்பது தொடர்ச்சியாக காணப்படுகிறது. எனத் தெரிவித்த அவர் எங்களுடைய சமத்துவக் கட்சியை பொறுத்தவரை பெண்களுக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்த கட்சியாக காணப்படுகின்றோம். உள்ளூராட்சி மன்றங்களில் கூட அதிகளவில் எங்களுடைய கட்சி பெண்களே உறுப்பினர்களாக உள்ளனர். நாம் கட்சியின் பெயரில் மாத்திரம் சமத்துவத்தை கொண்டிருக்கவில்லை செயல்பாடுகளிலும் அதனை நிரூபித்துள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

சமத்துவக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ஜாக்குலின் லூசியா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மதகுருமார்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# கோலாகலமாக நிகழ்ந்தேறியது 'பசுமை அமைதி' விருதுகள் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 20

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா நேற்றுமுன் தினம் சனிக்கிழமை கோலாகலமாக நிகழ்ந்தேறியது. பொது மக்களிடையே சூழல் கல்வியினூடாகச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல்பாதுகாப்புச் செயல்பாடுகளில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் 'பசுமை அமைதி' விருதுகளை வழங்கி வருகிறது. 2022ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கும் விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் கலந்துகொண்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மீன்பிடியியல் விஞ்ஞானத்துறையின் தலைவர் பேராசிரியர் சிவசாந்தினி குகநாதன், வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச. சர்வராஜா ஆகியோர் கலந்துகொண்டிருந்தார்கள்.




மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 100 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு சூழலியல் ஆசான் க.சி. குக தாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன.

முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி மாணவி அபிநயா சிவகரன் தங்கப்பதக்கம் வழங்கியும், இரண்டாம் இடத்தைப் பெற்ற திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி அம்சனா பேரின்பசிவம் வெள்ளிப்பதக்கம் வழங்கியும், மூன்றாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி மாணவன் சிவகரன் அபிசாய்ராம் வெண்கலப் பதக்கம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல் நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை இம்முறை முல்லைத்தீவைச் சேர்ந்த நாகலிங்கம் கனகசபாபதிநேசன் பெற்றிருந்தார். இவருக்கு விருதோடு ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

மேலும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் சிறந்த செய்கையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மாணாக்க உழவர்களாகவும், இராசதானியத் திட்டத்தின் கீழ் சிறுதானியச் செய்கையைச் சிறப்பாக மேற்கொண்டவர்கள் மாண்புறு உழவர்களாகவும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற இவ்விழா அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இலங்கையில் வழங்கப்பட்டுவரும் சூழல்சார் விருதுகளில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த முன்னிலை விருதுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

(ஐ)

# வலி. கிழக்கில் 3 முன்பள்ளிகள் ஸ்மார்ட் முன்பள்ளிகளாகின்றன!

## தவிசாளர் நிரோஷ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் நேரடியாக முகாமை செய்யப்படும் மூன்று முன் பள்ளிகளும் ஸ்மார்ட் முன் பள்ளிகளாக எதிர்வரும் வாரம் முதல் இயங்கும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், முன்பள்ளிகளை வலுப்படுத்தும் எமது சபையின் செயற்றிட்டத்துக்கமைய, சபை நிதி மூலம் 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மூன்று ஸ்மார்ட் பலகைகள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றை பிரதேச சபையின் நேரடி முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் ஆவரங்கால் அரிச்சுவடி முன்பள்ளி, இருபாலை சிகரம் முன்பள்ளி, அச்சுவேலி கஜமுகன் முன்பள்ளிகளுக்கு பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தாயகத்தில் முன்பள்ளிக் கல்வியை கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாக உணர்கின்றோம். ஏற்கனவே எமது சபை இருபாலை சிகரம் முன்பள்ளியை ஒரு கோடி ரூபாய் வரையான செலவுடன் புதிதாக அமைத்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அரிச்சுவடி முன்பள்ளி அமைப்புக்காக 60 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. கஜமுகன் முன்பள்ளியும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகள் மாகாண மட்டத்தில் பேட்டி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட சிறப்புத் தேர்ச்சி மிக்க ஆசிரியர் குழாத்தின் ஊடாக இயக்கப்படுகின்றன.

இந்த முன்பள்ளிகளில் மில்லியன்களில் செலவிடப்பட்டு நவீன விளையாட்டு உபகரண தொகுதிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலாக குறித்த முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடை, சத்துணவுத்திட்டம், கல்விச் சுற்றுலா என்பவற்றினையும் சபை மேற்கொள்கின்றது.

வருமான ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பிள்ளைகளும் வசதி வாய்ப்புள்ள குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகள் பெறும் வாய்ப்புக்களை பாரபட்சமின்றி பெறவேண்டும் என்ற நோக்கில் நாம் இந்த முன்பள்ளிகளில் கல்விக்கான முதலீடுகளை நிதிப்பற்றாக்குறை சவாலினையும் எதிர்கொண்டு பயன்படுத்துகிறோம். இந்நிலைமையை பிரதேச மக்கள் உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# குளத்திலிருந்து சடலம் மீட்பு!

வவுனியா, மார்ச் 20

வவுனியாவில் உள்ள குளம் ஒன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

குளத்தின் வான் கதவுப் பகுதியில் சடலமொன்று கிடப்பதைக் கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, அந்த இடத்துக்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

ஒரு சிலநாட்களுக்கு முன்னர் குறித்த நபர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், சடலத்துக்கு உரியவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# சிறுமியை காதலிப்பதாகக்கூறி கடத்திச் சென்ற இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 20

காதலிப்பதாகக்கூறி 14 வயது மாணவியை கடத்திச் சென்ற இளைஞனை தெல்லிப்பழை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவியை காதலிப்பதாகக் கூறி அப்பகுதியை சேர்ந்த இளைஞன், முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புக்கு கடத்திச் சென்றுள்ளார்.

பாடசாலைக்குச் சென்ற மாணவியைக் காணவில்லை என தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், மாணவி புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ளார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் மாணவியை மீட்டனர். அத்துடன், மாணவியைக் கடத்தி சென்ற இளைஞனையும் கைது செய்தனர்.

மீட்கப்பட்ட மாணவி, மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# தமிழரசின் கிளை செயலர் விசாரணைக்கு அழைப்பு

கிளிநொச்சி, மார்ச் 20

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜய குமார், பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்கான காரணங்கள் எவையும் குறிப்பிடப்படாது, நேற்று முன்தினம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள எழுத்துமூல அழைப்பாணையில்,

வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக எதிர்வரும் 2023.03.24ஆம் திகதி, காலை 09 மணிக்கு, பரந்தனில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களினதும் தவிசாளர்கள் உள்ளிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 9 உறுப்பினர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்தது

## மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு



**கொழும்பு, மார்ச் 20**

**நாட்டில் நிலவிய டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டது என்று மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

டொலர் நெருக்கடி முடிவுக்கு வந்துவிட்டது என தெரிவித்துள்ள நந்தலால் வீரசிங்க தேவையான துறைகளுக்கு செலவிடுவதற்கு போதுமான அளவு டொலர் எம் வசம் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இன்று திங்கட்கிழமை - சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதியளிக்கும் எனக் கருதப்படும் இலங்கைக்கான நிதி உதவி கிடைத்த பின்னர் முதலீட்டாளர்களின் ஆர்வம் அதிகரிக்கும் என தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர் இதன் காரணமாக மேலும் நிதியும் முதலீடும் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# தங்கை கர்ப்பம்; அண்ணன் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 20

தங்கையை கர்ப்பமாக்கினார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட அண்ணனை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அச்சுவேலியை சேர்ந்த 22 வயது நபரே இவ்வாறு மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம், சிறுமி கர்ப்பமடைந்த நிலையில் அவரின் தாய் வைத்தியசாலைக்கு அழைத்து சென்று கருவை அழிக்க முற்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு மருத்துவ மனை பொலிஸார் தகவல் அளித்தனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் சிறுமியின் சகோதரன் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை; நூற்றாண்டு மெய்வன்மை போட்டி!

யாழ்ப்பாணம், மார்ச் 20

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை ஒட்டிய மெய்வன்மை போட்டிகள் கடந்த வியாழக்கிழமை கலாசாலை மைதானத்தில் நடைபெற்றன.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபரும் பிரான்ஸ் அரசால் 'செவாலியே' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவருமாகிய சிவயோகநாயகி இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ஐ)





# வவுனியாவில் கொள்ளை கும்பல் தொடர் கைவரிசை!

வவுனியா, மார்ச் 20

வவுனியா - கள்ளிக்குளம் கிராமத்துக்குள் சனிக்கிழமை இரவு புகுந்த கும்பல் ஒன்று அதிகாலை மூன்று மணி வரையிலும் மூன்று வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டு தப்பி சென்றுள்ளது.

வயோதிப மாது ஒருவர் வீடு ஒன்றுக்குள் தமது அடையாளங்களை மறைத்தவாறு நுழைந்த கும்பல் அந்தப் பெண்ணின் காதில் அணிந்திருந்த தோட்டை கழற்றித்தருமாறு அச்சுறுத்தி பறித்தனர்.

பின்னர் அவரை அச்சுறுத்தி அயலவர் வீட்டுக்கு அழைத்து சென்று அவர்களை அழைக்குமாறு கூறினர். அயலவர்கள் கதவை திறந்தபோது, அவர்களின் வீட்டுக்குள் நுழைந்து அவர்களை அச்சுறுத்தி 5 பவுண், நகைகள் 18 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை பறித்து சென்றனர்.

தொடர்ந்து, அங்கிருந்து தப்பியவர்கள் தொலைவிலுள்ள வீட்டுக்குள் புகுந்து இரு சகோதரர்களை தாக்கவிட்டு அங்கும் பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனிடையே, இரண்டாவது வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது மாமடு பொலிஸாருக்கு கிராம மக்கள் முறைப்பாடளித்த போதும் பொலிஸார் அப்பகுதிக்கு வரவில்லை.

மூன்றாவது வீட்டில் கொள்ளை சம்பவம் இடம்பெற்றபோது அவசர பொலிஸாருக்கு முறையிட்ட பின்னரே அதிகாலைவேளை பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தொடர் கொள்ளைச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சகோதரர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, மூன்று வீடுகளிலும் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் மதிப்பீடு நேற்றுவரை மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எம். பிக்களின் வீடுகளுக்கான வாடகையை உயர்த்த தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 20

பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுத் தொகுதியின் வீட்டு வாடகை கட்டணத்தை உயர்த்துவதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இதன்படி, இந்த பிரேரணை எதிர்வரும் சில தினங்களில் பாராளுமன்ற சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வீடுகள் கட்டப்பட்ட 1994ஆம் ஆண்டு ஒரு வீட்டுக்கு 500 ரூபாய் மாத வாடகை வசூலிக்கப்பட்டது. பின்னர் ஒரு முறை மாத வாடகையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தி தற்போதுவரை அதே வாடகை தொகை வசூலிக்கப்படுகிறது.

இந்த எம். பி வீடுகளின் பராமரிப்புக்காக அதிக செலவினங்களை ஏற்றுக்கொள்வதற்காக இந்த வீடுகளின் வாடகை கட்டணத்தை அதிகரிக்க பாராளுமன்றத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெற்றோரின் மூடநம்பிக்கை சிறுவனின் உயிரை பறித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 20

பெற்றோரின் அதீத மத நம்பிக்கையால் புற்றுநோய்க்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையால் 5 வயது சிறுவன் உயிரிழந்தார்.

கோப்பாயில் இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

அந்த இடத்தைச் சேர்ந்த 5 வயது சிறுவனுக்கு இரத்த புற்றுநோய் கடந்த வருடம் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சைகள் யாழ். போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில், பெற்றோர் கோப்பாய் பகுதியில் உள்ள மத வழிபாட்டு இடத்துக்கு சென்று தமது பிள்ளைக்காக பிரார்த்தனை செய்தனர். இதன் போது அங்கிருந்தவர்கள், மருத்துவத்தால் பிள்ளையை குணமாக்க முடியாது எம்மிடம் அழைத்து வாருங்கள் பிரார்த்தனைகள் மூலம் குழந்தையை குணமாக்கலாம் என பெற்றோருக்கு நம்பிக்கையூட்டியுள்ளனர்.

இதனை அடுத்து பெற்றோர் தமது பிள்ளையை சிகிச்சைக்காக இந்தியாவுக்கு அழைத்து செல்ல போவதாக யாழ். போதனா மருத்துவமனையில் பொய் கூறிவிட்டு, பிள்ளைக்கு எந்தவித சிகிச்சையும் அளிக்காது, மத வழிபாட்டு தலத்துக்கு அழைத்து சென்று பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஒரு வருட காலத்துக்குப் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிறுவனுக்கு நோயின் தன்மை தீவிரமாகி வயிறு வீங்கி உணவு உண்பதனை குறைத்துள்ளான். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சிறுவன் உயிரிழந்தான். (ஐ)

# வாள்களுடன் ஐவர் மானிப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 20

மூன்று வாள்களுடன் ஐந்து சந்தேகநபர்களை மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் ஒன்றில் தொடர்புபட்ட வட்டுக்கோட்டையை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த இருவரிடம் முன்னெடுத்த விசாரணைகளின்போது மயானம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வாள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் மானிப்பாய் நகரிலுள்ள உள்ள பட்டறை ஒன்றில் வாளை தயாரித்த அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். அத்துடன், வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை பட்டறை உரிமையாளருக்கு உடந்தையாக செயல்பட்ட இளைஞர் ஒருவரையும் வாள்வெட்டு சம்பவங்களுக்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களை உதிரிப்பாகங்களாக்கி வெவ்வேறு பகுதிகளில் விற்ற ஒருவருமாக மொத்தமாக ஐந்து பேரை பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன், வாள்வெட்டு சம்பவத்திற்காக பயன்படுத்தப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# 20 இலட்சம் கனமீற்றர் மணலை அகழ திட்டம்!

## அமைச்சர் பிரசன்ன பணிப்புரை

கொழும்பு, மார்ச் 20

**இந்த வருடம் 20 இலட்சம் கன மீற்றர் கடல் மணலை அகழ்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.**

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.**

முறையாகக் கழுவப்பட்டு, தேவையான தரத்தில் தயாரிக்கப்பட்ட கடல் மணலின் கனசதுரத்தை பொதுமக்களுக்கு மலிவு விலையில் விற்பனை செய்யுமாறு காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் முத்துராஜவலை கடற்கரையிலிருந்து நீர்கொழும்பு கடற்கரை வரையிலான 10-15 கிலோமீற்றர் தூரத்தில் கடலில் இருந்து நிலத்துக்கு கடல் மணல் அள்ளப்படும். இந்த கடல் மணல் அகழ்வுத் திட்டத்தால் கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரையான கடற்பரப்பில் வாழும் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவ்வாறு பாதிக்கப்படும் மீனவ சமூகத்தின் முன்னேற்றத்துக்காக அந்த மீனவ பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்யுமாறு பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கு முன்னதாக, இது தொடர்பில் அரசியல் அதிகாரிகள், பிரதேசத்தின் மதத் தலைவர்கள் மற்றும் மீனவர் சங்கங்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மீனவ சமூகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 20 கோடி ரூபாயை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை அத்தியாவசிய தேவையுடைய மக்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் அமைச்சர் கடுமையாக வலியுறுத்தியுள்ளார்.

கடலில் இருந்து குழாய்கள் மூலம் ஏற்றப்படும் மணலை சம்பந்தப்பட்ட இடத்துக்கு கொண்டுசென்று, திறந்த வெளியில் மணல் திட்டுகளாக சேமித்து, மணலை இயந்திரத்தில் செலுத்தி, அவற்றை கழுவி, சுத்தம் செய்து, தெரிவு செய்து உலர்த்துதல் என பல பிரிவுகளாக பணிகள் நடைபெறுகிறது.

இவ்வாறு கழுவி சுத்தம் செய்து உலர்த்தப்படும் உப்பு இல்லாத கடல் மணலை பொறியியலாளர்களின் மேற்பார்வையில் தேவையான தரத்தில் தயாரிக்கின்றனர். அதன் பின்னர் கெரவலப்பிட்டிய - முத்துராஜவலை மணல் விற்பனை நிலையத்தில் கடல் மணல் விற்பனை செய்யப்படும்.

கடல் மணலை பெறுவதற்கு முன்னர் கரையோரப் பாதுகாப்பு அதிகார சபை, நாரா நிறுவனம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற நிறுவனங்களிடமிருந்து சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# 10 வயது முதல் மகளை வன்புணர்வு செய்த தந்தையும் நண்பரும் கைது!

கொழும்பு, மார்ச் 20

10 வயது முதல் தனது மகளை தொடர்ச்சியாக ஆறு வருடங்களாக பாலியல் பலாத்காரம் செய்து வந்த தந்தையையும் அவரின் நண்பரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தந்தையால் மகள் பலாத்காரம் செய்யப்பட்டதாக நண்பர் பொலிஸார் தெரிவித்திருந்த நிலையில், விசாரணையில் இருவருமே சிறுமியை பலாத்காரம் செய்தமை தெரியவந்தது.

பாதிக்கப்பட்ட சிறுமியான மகளுக்கு தற்போது 16 வயது எனவும், புத்தளத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 10இல் கல்வி கற்று வருகிறார் எனவும், அவரது தந்தைக்கு 44 வயது எனவும், சம்பவத்துடன் தொடர்புடைய அவரின் நண்பருக்கு 39 வயது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தாயார் தொழில் நிமித்தமாக வெளியே சென்றிருந்த வேளையில் ஆறு வருடங்களுக்கு மேலாக சிறுமியை இருவரும் பாலியல் பலாத்காரம் செய்து வந்தமை விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று தாயார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# அநுர குமாரவுக்கு உயிர் அச்சுறுத்தல்

## விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் அநுரகுமார திஸநாயக்க உட்பட மக்கள் விடுதலை முன்னணியையோ அல்லது தேசிய மக்கள் சக்தியையோ பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் உரிய பொலிஸ் பாதுகாப்பைப் பெறவில்லை.

அரசாங்கத்தின் தற்போதைய பிரதான எதிரியாக இருப்பதால், அவர்களால் வழங்கப்படும் பாதுகாப்பை நம்ப முடியாது. அதனை விட மக்களின் பாதுகாப்பு பலமானது என விஜித ஹேரத் கூறியுள்ளார். (ஐ)

# மின்சார உற்பத்தி இயந்திரம் நுரைச்சோலையில் செயலிழப்பு

கொழும்பு, மார்ச் 20

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் 3ஆம் அலகில் கோளாறு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

"தடையில்லா மின்சாரத்தை உறுதி செய்வதற்காக, யுனிட் 3 ஏப்ரல் மாதத்தில் பெரிய பழுதுபார்க்கும் பராமரிப்புக்கு உட்படுத்தப்பட இருந்தது. எனினும், தற்போது அது செயலிழந்துள்ளது என்றாலும் மின்வெட்டு இருக்காது என்று இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான டீசல் மற்றும் எரிபொருள் எண்ணெய் மின் நிலையங்கள் மாற்றாக பயன்படுத்தப்படும்." என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)



# இரண்டு மாதங்களில் மட்டும் 3,500 படையினர் தப்பியோட்டம்

கொழும்பு, மார்ச் 20

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் ஆயுதப்படையின் 25 அதிகாரிகள் உட்பட மூவாயிரத்து ஐநூறுக்கும் அதிகமானோர் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் மட்டும், பத்து அதிகாரிகள் உட்பட சுமார் 1,500 ஆயுதப் படையினர் வெளியேறியுள்ளனர் என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் உட்பட பதின்மூன்று அதிகாரிகள் தனிப்பட்ட பயணமாக வெளிநாடு சென்று இராணுவத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன்காரணமாக புதிய கடவுச்சீட்டுகளை தயாரிப்பதற்கும் கடவுச்சீட்டுகளை புதுப்பிப்பதற்கும் முப்படைகளின் தளபதிகளின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சு குடிவரவு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார சிரமங்களினால் கடனை செலுத்த முடியாத நிலை, அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவிகளுக்கு உள்ள வசதிகள் குறைப்பு போன்ற காரணங்களால் இராணுவத்தினர் வெளியேற ஆரம்பித்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. (ஐ)

# ஐ. தே. க.வின் புதிய கொள்கை வரைபு; பொதுமக்களின் கருத்தறிய தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 20

ஐக்கிய தேசியக் கட்சிக்கான புதிய கொள்கை வரைபை உருவாக்குவதற்காக பொதுமக்களின் கருத்துகளை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கான புதிய கொள்கை வரைபை உருவாக்குவதற்கு, கட்சியின் செயல் குழுவில் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அந்தக் குழுவின் தீர்மானத்தின்படி கருத்துகளும் ஆலோசனைகளும் பெறப்படவுள்ளன.

குறித்த குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பனவும் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிஷங்க நாணயக்காரவும் ஜனாதிபதி சட்டத்தரணிகளான தயா பல்பொல மற்றும் ரோலண்ட் பெரேரா ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாகவும் செயற்படுகின்றனர்.

இதற்கமைவாக, புதிய கொள்கை வரைபை தயாரிப்பதற்கான யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து செயல்குழு உறுப்பினர்கள், மாவட்டத் தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், கட்சியுடன் இணைந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளது.

கட்சியின் புதிய கொள்கை வரைபுக்கான ஆலோசனைகளை மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் சட்டப் பிரிவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஷங்க நாணயக்கார தெரிவித்துள்ளார். (ஐ-கே)

# வான் மோதியதில் தந்தை, மகன் பலி!



கொழும்பு, மார்ச் 20

வானும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் இடம்பெற்ற விபத்தில் தந்தையும் தனயனும் பலியாகினர்.

கம்பஹா - சீதுவை - கொடுகொட வீதியில் பஞ்சானந்தா வித்தியாலயம் அருகே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 14 வயது மகனும் 45 வயதுடைய தந்தையும் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் வான் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# தென் கொரியா- ஜப்பான் தலைவர்கள் சந்திப்பு ஏன் மைல்கல்லாக பார்க்கப்படுகிறது?



தென் கொரியா மற்றும் ஜப்பான் நாட்டு தலைவர்கள் கடந்த வாரம் டோக்கியோவில் சந்தித்து பேசியுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் இந்த சந்திப்பு ஒரு புதிய மைல்கல் என்று பாராட்டப்படுகிறது. வட கொரியா கடந்த ஒரு வாரத்தில் நான்காவது சுற்று ஏவுகணைகளை ஏவியதற்கு மத்தியில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

2011-க்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த முதல் சந்திப்பில் என்னென்ன பங்கு வகிக்கின்ற என்பதை இக்கட்டுரை ஆய்கின்றது.

இந்த உச்சிமாநாட்டை சாத்தியமாக்குவதற்கான முயற்சிகளை எடுத்தவர் தென் கொரியாவின் அதிபர் யூன் சுக் இயோல்.

கடந்த 12 ஆண்டுகளில் இதுபோன்ற ஒரு மாநாட்டிற்காக தென் கொரியத் தலைவர் ஒருவர் ஜப்பானுக்கு அழைக்கப்படுவது இதுவே முதன்முறை. இந்த இரு அண்டைநாடுகளுக்கும் இடையேயான உறவு அவர்களின் கடந்தகால வரலாறு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. தென் கொரியா 1910 முதல் இரண்டாம் உலக போரின் இறுதிவரை ஜப்பானின் காலனிய நாடாக இருந்தது. நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கொரிய மக்களை தங்களின் சுரங்கங்களிலும் தொழிற்சாலைகளிலும் பணியாற்ற ஜப்பானிய ராணுவ வீரர்கள் கட்டாயப்படுத்தினர். பெண்கள், பாலியல் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

இந்த வடு கொரிய மக்களால் மறக்க முடியாததாகவும் மன்னிக்க முடியாததாகவும் உள்ளது. இந்நிலையில் கடந்த வாரம், ஜப்பான் அதன் அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அதிபர் யூன் கைவிட்டார். அதற்கு பதிலாக, இந்த நிதியை தென் கொரியாவே திரட்டவும் அவர் ஒப்புக்கொண்டார். இவ்வாறு செய்வதன் மூலம், வடகிழக்கு ஆசியாவின் பாதுகாப்பிற்காக கடந்த கால கசப்புகளை ஒதுக்கி வைக்க அவர் முயன்றார்.

இந்த ஒப்பந்தத்தை மிகப்பெரிய அவமானம் என்று எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டார். ஆனால், அதிபர் யூனின் முயற்சிதான் தற்போது அவர் டோக்கியோ செல்வதற்கான பாதையை ஏற்படுத்தி தந்துள்ளது. தென் கொரியாவில் உள்ள ராஜ்ஜிய உறவுகளுக்கான பிரதிநிதிகள் ஆச்சரியத்துடனும் ஈர்ப்புடனும் இதனை பார்க்கிறார்கள். வெளியுறவுக் கொள்கை தொடர்பான அனுபவம் இல்லாத, குறிப்பாக அரசியலில் புதியவர் ஒருவரின் துணிச்சலான , புத்திசாலித்தனமான நடவடிக்கையாக அவர்கள் இதைப் பார்க்கிறார்கள். கடந்த ஆண்டு வரை யூன் வழக்கறிஞராக இருந்தவர்.

அவர் பதவியேற்றதிலிருந்து, இரு நாடுகளுக்கும் இடையேயான முறிந்த உறவை சரிசெய்வதை தனது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக ஆக்கியுள்ளார். அணு ஆயுதம் ஏந்திய வட கொரியா மிகவும் ஆபத்தானதாக மாறி வருவதால், சியோல் டோக்கியோவுடன் உளவுத்துறையைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும், அவர்களின் ராணுவத்தினர் இணைந்து செயல்படுவதன் மூலமும் பயனடைய முடியும்.



சீனாவின் எழுச்சியை எதிர்த்துப் போராட அதன் கூட்டாளிகளை நெருக்கமாக இழுக்க தீவிரமாக முயற்சிக்கும் தனது நட்பு நாடான அமெரிக்காவையும் அவர் மகிழ்விக்க விரும்புகிறார். யூனின் ஜப்பான் ஒப்பந்தத்தை ‘ஒரு புதிய அத்தியாயம்” என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பாராட்டியுள்ளார். மேலும், அரசு முறை பயணமாக வெள்ளை மாளிகைக்கு வரவும் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச அளவில் தென்கொரியாவின் இடம் குறித்த ஒரு புதிய அத்தியாயத்தை இது குறிக்கிறது. வட கொரியா குறித்த தங்களது குறுகிய பார்வையை முடிவுக்கு கொண்டுவர அவர் விரும்புகிறார். அதற்கு பதிலாக, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் தென் கொரியா ஆற்றக்கூடிய பெரிய பங்கு குறித்து அவர் சிந்திக்கிறார். ஹிரோஷிமாவில் நடைபெறும் ஜி7 மாநாட்டிற்கான ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவின் அழைப்பு, இந்த பணியை நிறைவேற்றக்கூடும்.

பொருளாதாரப் பலன்களும் இந்த சந்திப்பில் உள்ளன. 2019ல் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு கடினமாக இருந்த காலக்கட்டத்தின்போது, சியோல் அதன் செமி-கண்டக்டர்களை உருவாக்க தேவைப்பட்ட ரசாயனங்களின் ஏற்றுமதிக்கு ஜப்பான் தடை விதித்தது. இந்த தடையை அகற்றுவது தொடர்பான பேச்சு, இந்த சந்திப்பில் முதன்மையாக இருக்கும் என்று மூத்த அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக உடைந்துபோன நம்பிக்கையை மீண்டும் சரி செய்வதற்கான வாய்ப்பை இந்த மாநாடு ஏற்படுத்தி தருகிறது. தற்போதுவரை சியோல் டோக்கியோவை விட அதிகமாக விட்டுக் கொடுத்துள்ளது. ஒரு மூத்த ராஜ்ஜிய உறவுகளுக்கான பிரதிநிதி கூறியதுபோல், தென் கொரியா நடன மேடைக்கு சென்று விளக்குகளை எரியவிட்டு அனைவரும் பார்க்க தனது அண்டை வீட்டாரை நடனத்துக்கு அழைத்துள்ளது. ஜப்பான் நடனமாட ஒப்புகொண்டுள்ளது. ஆனால், தென் கொரியா இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறது.

### ஜப்பானுக்கும் மூலோபாய வெற்றி

தென் கொரிய தலைவர் தனது மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பயணம் தொடர்பாக பல உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார். ஆனால் யூன் சுக் யோல் அவருக்குப் பிடித்தமான உணவுகளில் ஒன்றான ‘ஓமுரிஸ்” சையும் (ஆம்லேட்டுடன் கூடிய பிரைட் ரைஸ்) உண்ணுவார் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உச்சி மாநாட்டிற்கு பின்னர் புகழ்பெற்ற உணவகமான ரெங்கடேய்க்கு தென் கொரிய அதிபர் யூனை அழைத்துசெல்ல புமியோ கிஷிடா திட்டமிட்டுள்ளதாக யோமெரி நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

‘கூடுதல் தொலைவுக்கு செல்வது என்று ஒருசில ஊடகங்கள் இதனை விவரித்தன. அதேவேளையில், சமூக ஊடகங்களில் சிலர் இதனை ஓமரிஸ் ராஜதந்திரம் என்று அழைத்தனர்.

வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளும் பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவார்கள் என்று ஜப்பானின் கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நெருக்கமான உறவு மூலம் இரு நாடுகளுமே பலனடையும் என்பதில் சந்தேகம் இல்லை. அனால், ஜப்பானுக்கு இதுவொரு மூலோபாய மற்றும் ராஜதந்திர ரீதியிலான வெற்றியாகும். உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடான ஜப்பான் ஹிரோஷிமாவில் மே மாதம் ஜி7 மாநாட்டை நடத்த தயாராகி வருகிறது. சீனா, வட கொரியா ஆகிய நாடுகளின் அச்சுறுத்தல் குறித்த பேச்சு இந்த சந்திப்பில் முதன்மையாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. தென் கொரியாவுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது மூலம் இந்த அச்சுறுத்தலை எப்படி கையாள்வது என்பது தொடர்பான மிகவும் உறுதியான நிலைப்பாடு ஜப்பானுக்கு கிட்டும்.

இந்த சந்திப்பு அமெரிக்காவுக்கும் ஒரு முக்கிய செய்தியை அனுப்புகிறது. தற்போதும் தங்களது முக்கிய கூட்டாளியாக ஜப்பானை அமெரிக்கா நம்பலாம் என்பதை உறுதியளிக்க ஜப்பான் விரும்புகிறது. மேலும், பதற்றம் நிறைந்த, நிலையற்ற தன்மை அதிகரித்து வரும் பகுதியில் தாங்கள் சக்திவாய்ந்த நபராக இருப்பதாகவும் ஜப்பான் காட்டிக்கொள்ள விரும்புகிறது.

கொரிய தீபகற்பத்தில் ஜப்பானின் காலனித்துவ ஆட்சியின் போது கட்டாய தொழிலாளர் தகராறு காரணமாக டோக்கியோவிற்கும் சியோலுக்கும் இடையிலான உறவுகள் வீழ்ச்சியடைந்த 2019 க்குப் பிறகு ஜப்பானுக்கு வரும் முதல் தென் கொரிய அதிபர் யூன்.

தொலைக்காட்சி திரைகள், ஸ்மார்ட் போன் திரைகள் மற்றும் செமி கண்டக்டர்கள் ஆகியவற்றின் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் ரசாயானங்களை தென் கொரியாவுக்கு ஏற்றுமதி செய்ய ஜப்பான் தடை விதித்த பின்னர், இருநாடுகளுக்கும் இடையேயான உறவில் பதற்றம் அதிகரித்தது.

தென் கொரியா இந்த மாத தொடக்கத்தில் நீண்டகால சர்ச்சையைத் தீர்ப்பதற்கான திட்டத்தை அறிவித்தபோது, ராஜ்ஜிய உறவுகளுக்கான பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு புதிய தொடக்கத்திற்கான உற்சாக உணர்வு இருந்தது.

ஜப்பான் பிரதமர் கிஷிடா இந்த நடவடிக்கையை பாராட்டினார். வெளியுறவு அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி ‘ஆரோக்கியமான நிலைக்கு உறவுகளை திரும்பப் பெறுவதற்கான” முயற்சியை வரவேற்றார், அதே நேரத்தில் இரு தரப்பினரும் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட வர்த்தக தடைகளை திரும்பப் பெறுவது குறித்த பேச்சுவார்த்தைகளை அறிவித்தனர்.

இதைவிட முக்கியமான நேரத்தில் இந்த நல்லுறவு ஏற்படமுடியாது. ஜப்பான், தென் கொரியா மட்டுமல்லாது அவர்களுக்கு பொதுவான கூட்டாளியாக உள்ள அமெரிக்காவுக்கும் இந்த நல்லுறவு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

(09ஆம் பக்கம் பார்க்க)





# நீதிபதிகளை பதவி நீக்கும் இம்பீச்மென்ற்; சிங்கள தேச அரசியலில் புதியதன்று!

பனங்காட்டான்

2022ம் ஆண்டில் ஒரு வருட நீடிப்புப் பெற்ற இலங்கையின் 340 உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் முடிவடைந்துவிட்டது. மாநகர சபைகளும், பிரதேச சபைகளும் முறையே ஆணையாளர்களதும் செயலாளர்களதும் நிர்வாகத்தில் வந்துள்ளன.

நாடாளுமன்றத்தின் ஊடாக சிலவேளை மேலும் ஒரு வருட நீடிப்பு வழங்கப்படலாமென்ற எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. இதனால் 340 உள்ளூராட்சி மன்றங்களினதும் 8225 உறுப்பினர்களும் இப்போது முன்னாள்; களாகிவிட்டனர்.

ரணில் தலைமையிலான அரச இயந்திரம் தேர்தலுக்கு எதிராகவும், சுயாதீனமான என்று அழைக்கப்படும் தேர்தல் ஆணைக் குழு அதற்கு ஆதரவாகவும் - ஏறத்தாழ நாடாளுமன்றத்தில் அரசாங்கமும் எதிர்க் கட்சியும் போன்று மோதிக்கொள்ளும் அசாதாரண போக்கு தொடர்கிறது.

மழை விட்டும் தூவானம் போகவில்லையென்ற பழமொழி போன்று ஏப்ரல் 25ம் திகதிக்குப் பின்னரும் இவ்விவகாரம் இழுபடவே போகிறது. இவ்விவகாரத்துக்குள் நீதித்துறையும் இழுத்து வரப்பட்டுள்ளதே அவதானிப்புக்குரியதாகப் பார்க்கப் படுகிறது.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் வழங்கும் தீர்ப்புகளை அரசாங்கம் பாராமுகமாக்கி நிராகரிக்கும் செயற்பாடு தொடர்கிறது. நீதிமன்றங்கள் தங்கள் பணியைத் தொடர்வதும், அரசாங்கத்தால் அவை கவனிக்கப் படாதிருப்பதும் நீதித்துறை மீதான அவநம்பிக்கையை அதிகரிக்கச் செய்கிறது.

சமவேளையில், இத்தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல் தாக்கல் செய்த அரசியல் கட்சிகளின் செயலாளர்களை இந்த மாதம் 23ம் திகதி முக்கியமான கலந்துரையாடலுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைத்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தடுத்து வைக்கக் கூடாதென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும், அது கிடைக்கப்பெறாத நிலையில் அடுத்தது என்ன என்ற கேள்வியுடன் இச்சந்திப்பு இடம்பெறுகிறது.

17 மாவட்டங்களுக்கான முற்கூட்டிய வாக்களிப்பு அட்டைகள் அச்சடிக்கப்பட் டதாயினும், அதற்கான நிதி கிடைத்தால் மட்டுமே அவை கையளிக்கப்படுமென ஏற்கனவே அறிவித்திருந்த அரச அச்சகம், அப்படி எதுவுமே இதுவரை அச்சடிக்கப்படவில்லையென்று இப்போது கையை விரித்துள்ளது. இதே நிலைப்பாட்டில் தான் பாதுகாப்பு வழங்க வேண்டிய காவற்துறையும் இருக்கிறது. நிதி கிடைத்தால் மட்டுமே பாதுகாப்பு வழங்கப்படுமென்பது இதன் அசைக்க முடியாத நிலைப்பாடு.

அரசாங்க அச்சகத்தினதும், காவற்துறையினதும் அறிவிப்புகளை நோக்கும் போது, அரசாங்கம் பற்றிய இவைகளின் நிலைப்பாடு இரு வகைப்பட்டதாக இருக்கலாமென எண்ண வைக்கிறது. அரசாங் கத்திடம் நிதி இல்லை - எனவே அது உரிய நிதியை தராது ஏமாற்றலாமென்று நினைக்கிறார்களா? அல்லது அரசாங்கம் தேர்தலுக்கு சாதகமில்லாத நிலையிலிருப்பதால் அதற்கு அனுசரணையாக இயங்க வேண்டுமென விரும்புகிறார்களா? அநேகமாக இரண்டாவது அம்சமே காரணமாக இருக்கிறது என நம்ப இடமுண்டு.

இந்த நிலைப்பாட்டை புரிந்துகொண்ட பாணியில், ஏப்ரல் 25ம் திகதி தேர்தல் நடைபெறும் சாத்தியமில்லையென்று தேர்தல் ஆணைக்குழுவும், பவ்ரல் அமைப்புப் போன்ற சுயாதீன நிறுவனங்களும் பகிரங்கமாக தெரிவித்துள்ளன.

இவைகள் ஒருபுறம் நிகழ்ந்தேற, இன்னொரு புறத்தில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீரத்நாயக்க முக்கிய அறிவித்தலொன்றை விடுத்துள்ளார். 2021ம் ஆண்டின் கணக்கு அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் கடந்த 16ம் திகதிக்கு அடுத்துவரும் 14 நாட்களுக்குள் அதனை சமர்ப்பிக்கவேண்டுமென கேட்டுள்ளார்.

இந்த அறிவிப்பானது, ஏற்கனவே வேட்பாளர் நியமனம் தாக்கல் செய்த 58 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளில் சிலவற்றுக்கு நெருக்கடியைக் கொடுக்குமென எதிர்வு கூறப்படுகிறது. முக்கியமாக, தமிழர் தேசிய கட்சியொன்று இப்பிரச்சனையை எதிர் கொள்வதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் தொடர்பாக முன்னுக்குப்பின் வெவ்வேறு அறிவிப்புகள் தாறுமாறாக வந்து கொண்டிருக்கும் வேளையிலும், உயர்நீதிமன்றம் தேர்தல் நடைபெறாதிருப்பது



**நெவில் சமரக்கூன், சரத் என்.சில்வா, ஷிராணி பண்டாரநாயக்க ஆகிய மூன்ற பிரதம நீதியரசர்கள் மீது இம்பீச்மென்ற் எனும் பதவி நீக்க பிரேரணை கொண்டு வருவதற்கு பிதாமகராக அமைந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசியலமைப்பின் 107ஆம் பிரிவின் கீழ் அந்தக் கதவு இன்றும் திறந்தேயிருக்கிறது.**

தொடர்பான புதிய மனுவொன்றை விசாரணைக்கு எடுக்கும் முடிவை அறிவித் துள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்டுள்ள உயர்நீதிமன்றம் அதன் விசாரணையை யூன் 27ம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

இந்த விவகாரங்களைப் பார்க்கின், அரச மட்டத்தில் தீர்க்கப்பட முடியாத விடயத்தை நீதிமன்ற உத்தரவினூடாக தீர்த்துவிட முடியுமென இன்னும் சிலர் நம்புவது போல தெரிகிறது. இதன் சாத்தியப்பாடு பற்றி ஆராய்வதற்கு முன்னர், அரச உயர்மட்டங்களுடன் சட்டப்படி மோதிய நீதித்துறை கடந்த காலங்களில் சந்தித்த சில கசப்பான அனுபவங்களை மீள்நினைவுக்கு உட்படுத்துவது அவசிய மாகிறது.

1977ல் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெய வர்த்தன, பிரதம நீதியரசராக தமக்கு மிக நெருக்கமான வழக்கறிஞர் நெவில் சமரக் கூன் கியூ.ஸியை அதேயாண்டில் நியமித்தார். நீதிபதி பதவி வகிக்காத ஒருவர் பிரதம நீதியரசராக நியமனமானது இதுவே முதற்தடவை. 1978 பெப்ரவரி 4ம் திகதி காலிமுகத்திடலில் நெவில் சமரக்கூன் முன்னிலையில் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்தார்.

1983ம் ஆண்டு பொது நிகழ்வொன்றில் ஜே.ஆர்.ஜெய வர்த்தன பற்றி பாதகமான கருத்தொன்றை பிரதம நீதியரசர் கூறியதால், அவரை குற்றவியல் பிரே ரணை (இம்பீச்மென்ற்) மூலம் பதவி நீக்க ஜே.ஆர். நடவ டிக்கை எடுத்தார். 1984ல் இதற்கான பிரேரணை நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், நெவில் சமரக்கூன் தமது பதவியை ராஜினாமா செய்து விட்டு ஆஸ்திரேலியா பறந்துவிட்டார்.

இதேபோன்று 2001ல் பிரதம நீதியரச ராகவிருந்த சரத் என்.சில்வாவையும் பதவி நீக்கும் பிரேரணை 77 எம்.பிக்களின் ஒப்பத்துடன் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போதிருந்த அரசாட்சியின் ஸ்திரமற்ற நிலையால் பிரேரணையை தொடர முடியாமல் போய்விட்டது.

இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்கவை 2013 ஜனவரியில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு இம்பீச்மென்ற் பிரேரணை மூலம் பதவி நீக்கியது. 2015ல் ஆட்சி மாற்றத்தை யடுத்து ஜனாதிபதியாக பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன அரசு ஷிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் பிர தம நீதியரசராக நியமித்ததாயினும், அவர் ஒருநாள் மட் டும் அப்பதவியை வகித்துவிட்டு ஓய்வு பெற்றுச் சென்றார்.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தவேளை யில் நீதிபதி ஒருவர் அவருக்கு சாதகமாக இயங்க மறுத்தமையால், அரச பேருந்துகளில் சென்ற காடையர்களால் அவரது



இல்லம் தாக்கப்பட்டது. உயிராபத்தில் இருந்த நீதிபதி காவற்துறை யின் உதவியை நாடினாராயினும், ஜனாதிபதி அலுவலகத்தின் அனுமதி கிடைக்காததால் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

இலங்கையின் நீதித்துறையின் சீத்துவக்கேட்டுக்கு இவ்வாறான பல உதாரணங் கள் உண்டு. இவை நீதிக்கெதிராக அரச நிர்வாகம் நீதி வழங்கும் நடைமுறைகள்.

இலங்கை அரசியலமைப்பின் 107ம் பிரிவின்படி, பிரதம நீதியரசருக்கெதி ராக மட்டுமன்றி உச்ச நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன் றத்தின் எந்தவொரு நீதிபதிக்கெதிராக வும் பதவி நீக்கும் இம்பீச்மென்ற் நட வடிக்கையை முன் னெடுக்க இடமுண்டு. (The constitu -tion in article 107 provides for the impeachment of not only the Chief Justice, but any judge of the Supreme Court or the Court of Appeal)

இலங்கையில் பிரதம நீதியரசருக்கெ திராக குற்றவியல் பிரேரணையை கொண்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வழி வந்த ஜனாதிபதி ரணில், தேவையேற்படின் எப்போதாவது அதேவழியை பின்பற்ற மாட்டாரென்று எண்ணக் கூடாது. ரணிலுக்கு இது நாகாஸ்திரமாக அமைந்தாலும் ஆச்சரியப்பட நேராது. ●

# தென் கொரியா- ஜப்பான் தலைவர்கள்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜோ பிடன் வெளியிட்ட அறிக்கையில், இது 'அமெரிக்கா வின் இரண்டு நெருங்கிய நட்பு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு , கூட்டாண்மையின் ஒரு புதிய அத்தியாயம்" என்று கூறினார்.

'முழுமையாக உணரப்பட்டால், பொதுவான, திறந்த இந்தோ-பசிபிக்கிற்கான எங்கள் பகிரப்பட்ட பார்வையை நிலை நிறுத்தவும் மேம்படுத்தவும் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உதவும்," என்றும் அவர் கூறினார்.

ஆனால், இரு தலைவர்களுக்குமே இது மிகவும் எளிதானதாக இருக்காது. இரு நாடுகளின் அரசியல்வாதிகள் மத்தியில் இன்னும் ஒரு பெரிய வரலாற்று பதற்றம், அவநம்பிக்கை உள்ளது.

தற்போதைய சூழலில், பொதுவான மற்றும் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை இந்த இரு நாடுகளுமே எதிர்கொண்டுள்ளன. வட கொரியா குறைந்தபட்சம் இரண்டு குறுகிய தொலைவு ஏவுகணைகளை ஜப்பான் கடலை நோக்கி செலுத்தி சோதனை செய்ய திட்டமிட்டுள்ள அதே வாரத்தில் இவர்களின் சந்திப்பு திட்டமிடப்பட்டுள்ளது.

பியோங்யாங் வலிமையான, மேம்பட்ட ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது - மேலும் அது விரைவில் அணு ஆயுதங்களை சோதிக்கும் என்ற கவலையும் உள்ளது.

சீனா அப்பகுதியில் ஆக்ரோஷமாக விரிவடைந்து வருகிறது. சாலமன் தீவுகளில் அதன் ராணுவத் தளத்தின் சந்தேகத் திற்குரிய திட்டம் ( இந்த திட்டத்தை பெய் ஜிங் மறுக்கிறது) வாஷிங்டனையும் ஆசிய - பசிபிக்கில் உள்ள அதன் கூட்டாளிகளையும் கவலையடையச் செய்துள்ளது.

கடந்த மாதம், சீன உளவு பலூன்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்திய பின்னர், ஜப்பான் அரசாங்கம், 2019 முதல் நாட்டின் நிலப்பரப்பில் காணப்பட்ட மூன்று அடையாளம் தெரியாத பறக்கும் பொருட்கள் சீன உளவு பலூன்களாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகக் கூறியது.

எதிர்காலத்தில் வெளிநாட்டு பலூன் மூலம் நாட்டின் வான்வெளியில் ஏதேனும் மீறல்கள் நடந்தால் அது தொடர்பாக பலத்தை பயன்படுத்துவது குறித்த அதன் விதிகளை மறுபரிசீலனை செய்வதாக ஜப்பான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுபோன்ற வெளிநாட்டு பலூன்களை சுட்டு வீழ்த்துவதை அரசாங்கம் நிராகரிக்காது என்று பாதுகாப்பு அமைச்சர் யசுகாசு ஹமாடா முன்னதாக சுட்டிக்காட்டினார்.

தாய்வானை நோக்கி சீன ஆக்கிரமிப்பு ஏற்படக்கூடும் என்று ஜப்பான் தொடர்ந்து கவலைப்படுகிறது. உக்ரேனில் நடந்து வரும் போரில் பெய்ஜிங் மாஸ்கோவை நோக்கிச் சாய்வதைத் தொடர்ந்து அந்த கவலைகள் ஆழமாகின்றன.

ஜப்பானும் தென்கொரியாவும் இடையே இன்னல் நிறைந்த கடந்த கால வரலாறு உள்ளது. ஆனால் இரு நாடுகளும் இப்போது பதற்றமான நிகழ்காலத்தையும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பாக நிச்சயமற்ற எதிர்காலத்தையும் எதிர்கொள்கின்றன. ●

# சுகாதார விதிகளை பின்பற்றாத உணவகங்களை மூட நடவடிக்கை

## கல்முனை சுகதார சேவை பணிப்பாளர்

கொழும்பு, மார்ச் 20

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ. எல். எம். றிபாஸ் நேற்று தெரிவித்தார்.

கல்முனை, அட்டாளைச்சேனை, பொத்துவில், அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறை ஆகிய நகர் பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாதவும், இதன்போது உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், உணவு பரிமாறுவோர் ஆகியோருக்கு சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவுத் தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையை உறுதிப்படுத்தல், அதிக எண்ணெய், அதிக சீனி, அதிக உப்பு கொண்ட உணவுகளை விற்காதிருத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்புச் சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் மூடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## 40 அரச நிறுவனங்களை மூடுவதற்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 20

சுமார் 40 அரச நிறுவனங்களை மூடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுமக்களுக்கான சேவைகள் குறைந்த மட்டத்தில் காணப்படும் அரச நிறுவனங்களை மூடுவது குறித்தே கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

செலவுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் ஆகிய இலக்குகளை அடைய இதனூடாக எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்

(ஐ)

# போதைப்பொருள் ஒழிப்பில் ஆலயங்களும் பங்கேற்றன!

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு - போரதீவுப்பற்றில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையை இரு ஆலயங்களின் நிர்வாகங்கள் முன்னெடுத்துள்ளன.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட எல்லைக்கிராமங்களில் ஒன்றாக கருதப்படும், வெல்லாவெளி செல்வாபுரம் பகுதியில் உள்ள, செல்வாபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர், முத்துமாரியம்மன் ஆலயங்களின் நிர்வாகத்தினரே பொதுமக்களுடன் இணைந்து போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் செயல்பாடானது மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து கிராமங்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 36 ஆயிரம் தொன் உரத்தை கையளித்தது அமெரிக்கா!




கொழும்பு, மார்ச் 20

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் யு.எஸ். எய்ட் மற்றும் ஐக்கிய நாடுகள் உணவு, விவசாய அமைப்பும் வழங்கிய 36 ஆயிரம் மெற்றிக் தொன் டி. எஸ். பி சுப்பர் பொஸ்பேற் உரம் நேற்று மாலை விவசாய அமைச்சிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த உரமானது நெல் விவசாயிகளின் பயிர்களுக்கு அத்தியாவசிய ஊட்டச்சத்தை வழங்கும்.

விவசாய திணைக்களத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விதத்தில், ஒரு ஹெக்ரெயருக்கு 55 கிலோ டி. எஸ். பி. உரத்தை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு 11 ஆயிரத்து 537 மெற்றிக்தொன் உரம் விநியோகம் செய்யப்படும். இதில், மன்னாருக்கு - 1244 மெற்றிக் தொன், வவுனியாவுக்கு- 821 மெற்றிக்தொன், கிளிநொச்சிக்கு- 820 மெற்றிக்தொன், முல்லைத்தீவுக்கு 694 மெற்றிக் தொன், யாழ்ப்பாணத்திற்கு- 297 மெற்றிக்தொன் உரமும் வழங்கப்படும்.

(ஐ)

கல்வி tv CHANNEL-1

**20.03.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**20.03.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டு. - அம்பாறை எல்லை பிரச்னை; அரச அதிபர்கள் பேசி தீர்க்கவேண்டும்!

## ஒருங்கிணைப்பு குழுவில் தீர்மானம்!

காரைதீவு, மார்ச் 20

**காலாகாலமாக புரையோடிப்போயுள்ள அம்பாறை- மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பிரச்னை இனியும் தொடரக்கூடாது. இரண்டு அரசாங்க அதிபர்களின் கலந்துரையாடலோடு ஜனாதிபதியின் இணக்கப்பாட்டோடு இது தீர்த்து வைக்கப்படும் - இவ்வாறு கல்முனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

கல்முனைப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஐந்து வருடங்களுக்கு பிற்பாடு கடந்த வியாழக்கிழமை கல்முனை பிரதேச செயலாளர் எம். லியாக்கத்தலியின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான எஸ். எம். எம். முஷாரப் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



இதேசமயம், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன், மட்டு. - அம்பாறை எல்லை பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்து கருத்து வெளியிட்டார்.

அவர், அம்பாறை மாவட்டத்தின் வடக்கு எல்லை, மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு எல்லை என்பன இது வரை காலமும் தீர்க்கப்படாமல் இரண்டு மாவட்டத்துக்கு இடையில், ஏன் ஒரே சமூகத்திற்கிடையில் முரண்பாடுகளை பிரச்னைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

கல்முனை மாநகர சபையின் எல்லை வை ஜங்ஷன். கார்ட் வீதி என சொல்லப்படுகின்றது. இருந்த போதும் களுதாவளை பிரதேச சபையின் எல்லை எது? என்பது தெளிவாக சொல்லப்படாததன் காரணமாக ஒரே சமூகத்தைச் சேர்ந்த பெரிய நீலாவணை, பெரிய கல்லாறு மக்களிடையே பல காலமாக முரண்பாட்டுத் தன்மையும் பிரச்னைகளும் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பிரச்னைக்கான சுமுகமான தீர்வை பெற்றுத் தந்து இரு மக்களையும் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழி வகுத்து தருமாறு வேண்டுகிறேன் - என்றார்.

இதையடுதே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஐ - 10)



# சுவாமி நடராஜானந்தாவின் 56ஆவது சிரார்த்த தினம்!

காரைதீவு, மார்ச் 20

சேவையின் சின்னமாம் இராமகிருஸ்ணமிசன் சுவாமி நடராஜானந்தா ஜீ மஹராஜின் 56வது சிரார்த்ததின வைபவம் சனிக்கிழமை காலை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

அவர் பிறந்த காரைதீவு மண்ணில் இந்துசமய விருத்திச்சங்கம் பெருவிழாவை அடிகளாரது திருவுருவச்சிலைக்கு முன்னால் சங்கத்தலைவர் எஸ். மணிமாறன் தலைமையில் நடத்தியது.

முதலில் நந்திக் கொடி ஏற்றி வைத்து துறவற கீதம் இசைக்கப்பட்டது.

பகவான் இராமகிருஸ்ண பரமஹம்சரின் வேதபாராயணத்தைத் தொடர்ந்து சுவாமியின் திருவுருவுச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தலும் புஷ்பாஞ்சலியும் இடம்பெற்று தொடர்ந்து சங்கச்செயலாளர் கு. ஜெயராஜால் மங்களாரதி காட்டப்பட்டது.

பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ .ஜெகராஜன், கௌரவ அதிதியாக சுவாமி நடராஜானந்த நூற்றாண்டு விழா சபை செயலாளர் வி. ரி. சகாதேவராஜா, அறங்காவலர் ஒன்றிய தலைவர் இரா. குணசிங்கம்,செயலாளர், எஸ்.நந்தேஸ்வரன், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த கணக்காய்வாளர் திரு வி.குலேந்திரன், இந்துகலாசார உத்தியோகத்தர் திருமதி சி.சிவலோஜினி,

முன்னாள் பிரதேச சபை உபதவிசாளர் கே.தட்சணாமூர்த்தி, மற்றும் சுவாமியின் குடும்ப உறவினர் மன்ற உறுப்பினர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# ஏறாவூர் நகர சபையின் இறுதி அமர்வு நடைபெற்றது!

மட்டக்களப்பு, மார்ச் 20

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் நள்ளிரவுடன் முடிவடைந்த நிலையில், மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபையின் இறுதி அமர்வு நேற்று முன்தினம் நகர பிதா எம்.எஸ். சுபைர் தலைமையில் நடைபெற்றது.

இறுதி அமர்வின்போது, மட்டக்களப்பு - ஏறாவூர் புன்னக்குடா வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டடத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏறாவூர் நகர சபையின் இறுதி அமர்வின் போது, சபை நடவடிக்கையின் இடைநடுவில் பிரதித்தவிசாளர் அப்துல் வாசித் சபைக்குத் தலைமை வகித்தார்.

அத்துடன், சபையின் மூத்த உறுப்பினரான யு. ஏ. றசீதுக்கும் சற்று நேரம் சபைக்கு தலைமை தாங்கும் பொறுப்பு தவிசாளரால் வழங்கப்பட்டது.

இந்த சபையின் அமர்வு இறுதியானதாக அமைந்ததால் உறுப்பினர்கள் பரஸ்பரம் முகமன்கூறி, கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட கருத்துக்களினால் எவருக்காவது மனக் கசப்புக்கள் இருந்தால் மன்னிப்பும் கேட்டமையை அவதானிக்க முடிந்தது.

(ஐ)





பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேக நிகழ்வு சனிக்கிழமை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெற்ற போது...

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

மட்டக்களப்பு, மார்ச் 20

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மட்டக்களப்பு கிரான் பகுதயில் ஒருவர் உயிரிழந்தார்.

காட்டுப் பகுதிக்கு சென்றிருந்த நிலையிலேயே இவர் உயிரிழந்தார்.

சந்திவெளிப் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய தம்பிமுத்து கதிரமலை என்பவரே உயிரிழந்தவராவர்.

யானை தாக்கிய பகுதிக்கு கிரான் வனஜீவராசிகள் அதிகாரிகள் வருகை தந்து நிலமைகளை அவதானித்துச் சென்றனர்.

கிரான் பகுதியில் காட்டு யானைகளின் தாக்குதல் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உல்லாச படகு சேவை ஏறாவூரில் ஆரம்பம்!

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு ஏறாவூர் வாவியில் உல்லாச படகுச்சேவையை, நகர சபையின் தவிசாளர் எம். எஸ். சுபைர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

ஏறாவூர் வாவியோரம் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவுக்கு பொழுது போக்க வரும் சிறுவர்கள் இந்பத் படகுச் சேவையைப் பயன்படுத்த முடியும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஏறாவூர் பிரதேத்தில் பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சிக்கு அமைய இப்படகுச் சேவையை நடத்துவதற்காக

கடந்த வருடம் 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.



கடந்தகால நிர்வாகத்தால் முறையான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என சுட்டிக் காட்டிய நகர சபை தவிசாளர் தற்போது, மீனவர் கூட்டுறவுச்சங்கம் மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சு அலுவலகத்தில் அனுமதியைப் பெற்று, நகர சபைக்கு வருமானம் ஈட்டும் முகமாக இச்சேவையை ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

(ஐ)

# ரஷ்ய ஜனாதிபதி புடின் உக்ரைனுக்குள் நுழைவு



மொஸ்கோ, மார்ச் 20

போர் தொடங்கி ஒரு வருடத் தைக் கடந்த நிலையில் முதல் முறை யாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனுக்குள் நுழைந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து ஒரு வருடம் கடந்துள் ளது. இந்தப் போரில் ஆயிரக்கணக் கானோர் உயிரிழந்தனர். இதனிடையே, இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப் பிய நாடுகள் ஆதரவளித்து வருகின் றன. உக்ரைனுக்கு தேவையான ஆயுத உதவியை வழங்கிவரும் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ரஷ்யாமீது பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இதனிடையே, இந்த போரில் கிழக்கு உக்ரைனின் பல்வேறு நகரங்களை ரஷ்யா கைப்பற்றி யுள்ளது. இந்நிலையில், போர் தொடங்கி ஒரு வருடத்தைக் கடந்த நிலையில் முதல் முறையாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனுக்குள் நுழைந்துள்ளார். போரில் கைப்பற்றப்பட்ட உக்ரை னின் மரியுபோல் நகருக்கு நேற்று அவர் திடீர் பயணம் சென்றுள் ளார்.

மரியுபோல் நகரை ரஷ்ய படை கள் கடந்த ஆண்டு மே மாதம் கைப் பற்றியது. தற்போது மரியுபோல் நகர் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் அந்த நகருக்கு ஜனாதிபதி புடின் திடீர் பயணம் மேற்கொண்டார். ரஷ்ய ஜனாதி பதி புடினின் இந்தப் பயணம் உக்ரைன் - ரஷ்யா போரில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ஐ)

# நாளைய தினம் நான் கைது செய்யப்படுவேன்!

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



வாஷிங்டன், மார்ச் 20

நாளை செவ்வாய்க் கிழமை தான் கைது செய்யப்படக்கூடும் என எதிர்பார்ப்பதாக அமெ ரிக்காவின் முன்னாள் ஜனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் கூறி யுள்ளார்.

இதற்கு எதிராக ஆர்ப் பாட்டம் நடத்துமாறும் தனது ஆதரவாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆபாசப்பட நடிகை ஒருவருடன் ட்ரம்ப் பாலியல் உறவு கொண்டதாக கூறப்படுவது தொடர்பில், அந்த நடிகையை மௌனம் காக்கச் செய்வ தற்காக, 2016ஆம் ஆண் டின் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ட்ரம்ப் பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு விசாரணை தொடர்பிலேயே இவ் வாறு அவர் கூறியுள்ளார்.

தான் ஸ்தாபித்த ட்ரூத் சோஷல் எனும் சமூக வலைத்தளத்தில் நேற்று முன்தினம் காலை குறிப் பிட்டுள்ள ட்ரம்ப், மன் ஹட்டன் சட்ட மா அதிபர் அலுவலகத்தி லிருந்து கசிந்த தகவலின் படி, ‘குடியரசுக் கட்சி யின் முன்னிலை வேட் பாளரும், ஐக்கிய அமெரிக்காவின் முன் னாள் ஜனாதிபதியுமானவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்படுவார். எனவே, ஆர்ப்பாட்டம் நடத்துங்கள், எமது தேசத்தை மீளக் கொண்டு வாருங்கள்’ எனக் குறிப் பிட்டுள்ளார்.

ஸ்டோர்மி டேனி யல்ஸ் என அறியப்பட்ட ஸ்டெபானி கிளிபர்ட் எனும் நடிகை 2016 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன் னர் தனக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் டொலர்கள் வழங்கப் பட்டதாகக் கூறுகிறார். இது தொடர் பாக மன்ஹட்டன் மாவட்ட அதிகாரிகள் 5 வரு டங்களாக விசாரணை நடத்து கின்றனர்.

அந்தப் பெண்ணுடன் தான் பாலியல் உறவு கொள்ள வில்லை என ட்ரம்ப் கூறி வருகிறார். இது தொடர்பில் ஜூரிகள் முன்னிலையில் வாக்குமூலம் அளிக்குமாறு ட்ரம்புக்கு அதிகாரிகள் அழைப்பு விடுத்துள்ளனர் என ட்ரம்பின் சட்டத்தரணி கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா வைரஸ் தொடர்பான தரவுகளை சீனா பகிரவேண்டும்!

## உலக சுகாதார ஸ்தாபனம்

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற் றின் ஆரம்ப காலத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பான ஒவ்வொரு தரவு களும் உடனடியாக சர்வதேச சமூகத்துடன் சீனா பகிரவேண் டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சீனாவின் வுகான் நகரில் 2019 டிசெம்பர் இறுதியில் கொரோனா வைரஸ் தொற்று பரவியது. இந்த தொற்று உலக நாடுகள் முழுவதும் பரவி பாதிப்புகளை ஏற்படுத்தியது. இதனிடையே, கொரோனா பெருந்தொற்று தனது நாட்டில் வெளிப்பட்டது தொடர்பான தரவுகளை சீனா தொடர்ந்து மறைத்து வருவதாக குற்றச் சாட்டு நீடிக்கிறது.

கொரோனாவின் ஆரம்ப காலத்தில் வுகான் நகரத்தில் ஹூவானன் சந்தைதான் தொற்றின் மையமாக விளங் கியது. ஆனால், அங்கிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் தொடர்புள்ள தரவுகளை சீனா வெளிப்படையாக வெளியிட வில்லை. இதை உலக சுகாதார அமைப்பு கண்டித்துள்ளது.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட் ரோஸ் அதானோம் கூறுகை யில், கொரோனா வைரஸ் தொற்றின் ஆரம்ப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பான ஒவ்வொரு தரவு களும் உடனடியாக சர்வதேச சமூகத்துடன் பகிரப்பட வேண் டும். இந்தத் தரவுகள் 3 ஆண்டுக்கு முன்பே பகிரப்பட்டிருக்க வேண் டும். தரவுகளைப் பகிர்ந்து கொள்வதில் சீனா வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என நாங்கள் தொடர்ந்து அழைப்பு விடுக்கி றோம்”, என் றார். (ஐ)

# மர்மப் பொருள் வெடித்து 11 சிறுவர்கள் உயிரிழப்பு

கார்ட்டோம், மார்ச் 20

மர்மப் பொருளுடன் விளை யாடிய 11 சிறுவர்கள் அது வெடித்ததில் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான சூடா னில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சூடானில் கடந்த 2013இல் உள்நாட்டு போர் தொடங்கி யது. தொடர்ந்து 5 ஆண்டுகள் நீடித்த இந்த போரில் 4 இலட் சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இந்த காலகட்டத்தில் ஏராளமான வெடிகுண்டுகள் அங்கு வீசப் பட்டன. அந்த வெடிகுண்டுகள் வெடித்து அவ்வப்போது இது போன்ற கொடூர சம்பவங்கள் அரங்கேறி வருவது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# பேருந்து விபத்தில் 17 பேர் உயிரிழப்பு



டாக்கா, மார்ச் 20

பங்களாதேஷில் இடம் பெற்ற பஸ் விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

நெடுஞ்சாலையில் அமைக் கப்பட்டிருந்த வேலியை தகர்த் துக்கொண்டு பஸ் வீதியோர கால்வாய்க்குள் விழுந்ததில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட் டன. பஸ் சாரதி கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

புதிதாக அமைக்கப்பட் டுள்ள நெடுஞ்சாலையில் ஏற் பட்டுள்ள இந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (ஐ)

# அமெரிக்காவுடன் இணையும் எண்ணம் ஆஸிக்கு இல்லை!

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

சிட்னி, மார்ச் 20

தாய்வான் தொடர்பில் யுத் தம் வெடித்தால் அமெரிக்கா வின் பக்கம் இணையும் எண் ணம் எதுவும் அவுஸ்திரேலியா வுக்கு இல்லை என்று அவுஸ்தி ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிச்சட் மார்லஸ் தெரிவித்துள் ளார்.

அக்கஸ் உடன்படிக்கை தொடர்பான பேச்சுகளின் போது தாய்வான் தொடர்பான எதிர்கால யுத்தத்தின்போது அமெரிக்காவுடன் இணைந்து கொள்வது தொடர்பில் அவுஸ்திரேலியா எந்த உத்தர வாதத்தையும் வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சீனாவின் துரித இராணுவ உருவாக்கம் நாங்கள் வாழும் பூலோபாய பகுதியை தீர்மா னிக்கின்றது. தென்சீன கடலில் வர்த்தகம் நடமாடும் மற்றும் விமானப் போக்குவரத்து சுதந் திரம் குறித்த அவுஸ்திரேலியா வின் நலன்களை பாதுகாப்ப தற்கு அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிகள் உதவும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



தாய்வான் தொடர்பிலான எதிர்கால யுத்தம் குறித்து நான் எதிர்வுகூறப்போவதில்லை என வும் ரிச்சட் மார்லஸ் தெரிவித் துள்ளார். (ஐ)



## நியூசிலாந்துடனான டெஸ்ட் இலங்கைக்கு பின்னடைவு!

வெலிங்டன், மார்ச் 20

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்த இலங்கை அணி, இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 113 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்து சென்றுள்ளது. டெஸ்ட் தொடரில் தற்போது விளையாடி வரும் இலங்கை முதல் டெஸ்ட் போட்டியை நியூசிலாந்திடம் இழந்தது. இந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது.

முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 580 ஓட்டங்களை குவித்தது. இதில் கேன் வில்லியம்சன் 215, நிக்கோல்ஸ் 200 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் ஆட்டம் நிறைவடைந்தபோது இலங்கை முதல் இன்னிங்ஸில் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்திருந்தது.

நேற்று ஆட்டம் தொடங்கியபோது டிமுத் கருணாரட்ன 16, பிரபாத் ஜெயசூரிய 4 ஓட்டங்களுடன் ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

பிரபாத் ஜெயசூரிய மேலதிகமாக ஓட்டங்களை பெறாமலே ஆட்டமிழந்தார். பின்னர் வந்தவர்களில் டினேஷ் சந்திமால் 37, நிஷான் மதுஷ்க 19 ஆகியோரே அதிக ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் வெளியேறினர்.

திமுத் கருணாரட்ண அபாரமாக ஆடி 89 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்திருந்தது.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் மட ஹென்றி, பிராஸ்வெல் ஆகியோர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

416 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த இலங்கை ஆட்டத்தை பின்தொடர்ந்தது.

நேற்றைய தினம் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அந்த அணியின் ஓசத பெர்னாண்டோ 5, திமுத் கருணாரட்ன 51 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் இலங்கை அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 113 விக்கெட்களை பெற்றுள்ளனர். குஷல் மெண்டிஸ் 50, அஞ்சலோ மெண்ட்ஸ் ஓர் ஓட் டத்துடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் நான்காவது நாளாகும். (ஐ)

# ஸ்ரார்க்கின் அபார பந்துவீச்சில் ஆஸியிடம் வீழ்ந்தது இந்தியா!



விசாகப்பட்டினம், மார்ச் 20

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியை அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட், ஒருநாள் தொடர் களில் விளையாடி வருகிறது. 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதையடுத்து மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு நாள் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித் தது. இந்நிலையில் 2ஆவது போட்டி விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்றது.

போட்டி தொடங்க முன்னர் மழை பெய்ததால் ஈரப்பதம் கொண்ட மைதானத்தில் நாணயச் சுழற்சியில் வெல்வது முக்கியமா னதாக இருந்தது. ஆனால், அதிர்ஷ் டம் அவுஸ்திரேலியாவுக்கு கிடைத் தது. நாணயச் சுழற்சியை வென்ற அவுஸ்திரேலியா முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதன்படி, களமிறங்கிய இந்திய அணி முதல் துடுப்பாட்டத்தில் தடுமாறியது. ஷூப்மன் கில், ஸ்டார்க் வீசிய முதல் ஓவரிலேயே ஓட்டம் எதுவும் எடுக்காமல் பிடி யெடுப்பாகி வெளியேறி அதிர்ச்சி கொடுத்தார். கடந்த போட்டியில் விளையாடாத கேப்டன் ரோஹித் சர்மா மீது அதிக எதிர்பார்ப்பு இருந்தபோதும், 13 ஓட்டங்களுக்கு அவரும் ஸ்டார்க்கின் வேகபந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் விக்கெட்டை பறிகொடுத்தார்.

இதற்கடுத்த பந்தில் சூரியகுமார் யாதவ் ஓட்டம் எதுவும் எடுக்காமல் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். கடந்த போட்டியில் தொடக்க ஆட்டக்காரராக கள மிறங்கி சிறப்பானதோர் இன்னிங்ஸை விளையாடி கடைசிவரை ஆட்டமிழக்காமல் நின்று அணிக்கு வெற்றி தேடித்தந்த கே. எல். ராகுல் இம்முறை 9 ஓட்டங்களுடன் அரங் கம் திரும்பினார்.

மற்றவர்கள் வருவதும் போவது மாக இருந்தாலும் விராட் கோலி களத்தில் இருந்தது ரசிகர்களுக்கு சற்று ஆசுவாசதத்தைக் கொடுத்தது. அதற்கேற்ப விராட்டும் சீரான இடைவெளியில் பௌண்ட்ரிகளை விரட்டி ஓட்டங்களை சேகரித்து வந்தார். ஆனால், அவுஸ்திரேலியா வின் இளம் பந்துவீச்சாளர் எல்லிஸ் அதற்கும் வேட்டு வைத்தார். அவர் வீசிய இரண்டாவது பந்திலேயே விராட் கோலி எல். பி. டபிள்யூ ஆகி வெளியேற, இதன்பின் வந்த வர்கள் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். அக்சர் பட்டேல் மட் டுமே கடைசிவரை ஆட்டமிழக்கா மல் 29 ஓட்டங்கள் சேர்த்தார்.

26 ஓவர்கள் முடிவில் இந்திய அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 117 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இன்றைய போட்டியில் இந்திய வீரர்கள் நால்வர் ஓட்டம் எடுக்காமலேயே வெளியேறினர்.

இந்திய அணியின் முதல்நிலை வீரர்களின் விக்கெட்களை பறித்து சரிவுக்கு வித்திட்ட மிற்செல் ஸ்ரார்க், ஐந்து விக்கெட்களைக் கைப்பற்றினார். அவருக்கு பக்கபல மாக ஸீன் அப்பொட் 3 விக்கெட்களையும், நதன் எல்லிஸ் இரண்டு விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 118 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு டன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ட்ராவிஸ் ஹெட், மிட் செல் மார்ஷெல் இணை தொடக் கம் கொடுத்தது.

இருவரும் இந்திய பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்து பறக்க விட்டனர். இறுதியில் இந்திய அணி நிர்ணயித்த இலக்கை எந்தவித விக்கெட் இழப்புமின்றி எட்டியது அவுஸ்திரேலியா. டிரா விஸ் ஹெட் 51 ஓட்டங்களுடனும் மிற்செல் மார்ஸ் 66 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். (ஐ)

## இந்தியன்வெல்ஸ் தொடர் மெட்விதேவ் இறுதியில்!



கலிபோர்னியா, மார்ச் 20

இந்தியன் வெல்ஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு முதன்முறையாக ரஷ்ய வீரர் மெட்விதேவ் தகுதி பெற்றுள்ளார்.

இந்தியன் வெல்ஸ் சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடக்கிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி போட்டியில் உலக தரவரிசையில் 6ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்ய வீரர் டேனில் மெட்விதேவ், அமெரிக்க வீரர் பிரான்சிஸ் தியாபோவுடன் மோதினார்.

இந்த போட்டியில் மெட்விதேவ் 7-5, 7-6 (7-4) என்ற செற் கணக்கில் பிரான்சிஸை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் அவர் முதன் முறையாக இந்தியன் வெல்ஸ் தொடரின் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். (ஐ)

## மேற்கிந்தியத்தீவுகளிடம் வீழ்ந்தது தென்னாபிரிக்கா



கேப்டவுன், மார்ச் 20

தென்னாபிரிக்கா அணியை 48 ஓட்டங்களால் வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி அங்கு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று ஆடி வருகிறது.

இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

இதைத்தொடர்ந்து நடந்த முதல் ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி கிழக்கு லண்டனில் நடைபெற்றது.

இந்த போட்டியில் நாணயச்சுழற்சியல் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பெடுத்தாடியது. இதன்படி, முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 335 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியின் தலைவர் ஷாய் ஹோப் பொறுப்புடன் ஆடி சதமடித்தார்.

128 ஓட்டங்கள் எடுத்த அவர் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். ரோமன் பாவெல் 46 ஓட்டங்களும் நிக்கோலஸ் பூரான் 39 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து, 336 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் தென்னாபிரிக்கா அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் பொறுப்பாக ஆடினர். குயின்ரன் டி கொக் 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. ஒருபுறம் விக்கெட்கள் வீழ்ந்தாலும் பவுமா சிறப்பாக ஆடினார். அதிரடியாக ஆடிய பவுமா 118 பந்தில் 144 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில், தென்னாபிரிக்கா 41.4 ஓவரில் 287 ரன்னுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகன் விருது ஷாய் ஹோப்புக்கு வழங்கப்பட்டது. இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

# ஜனாதிபதி ரணில் அரசாங்கத்தில் எந்த பதவியும் வகிக்க மாட்டேன்!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 20**
**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் தான் எந்தப் பதவியையும் வகிக்கப்போவதில்லை. கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.**

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கும் பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சு வெள்ளிக்கிழமை பொதுஜன பெரமுன பணிமனையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளார்கள். கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை. மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் மாகாண நிர்வாக கட்டமைப்பில் பெரும் சிக்கல்கள் தோற்றம் பெற்றுள்ளன.

ஆகவே, பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்காமல் இருப்பதால் பிரதேச மட்டத்தில் சேவைகளை முன்னெடுக்க முடியாமல் உள்ளது என பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

நிலையான அமைச்சரவைக்கு



சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் 10 உறுப்பினர்களின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்து அமைச்சரவை மறுசீரமைக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

ஆகவே, நிலையான அமைச்சரவையில் பொதுஜன பெரமுனவுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படும் என எதிர்பார்ப்பதாக பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கைக்கு சாதகமான முடிவை ஐ. எம். எவ். எடுக்கும்!

## வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 20
சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை இலங்கைக்கு சாதகமான தீர்மானத்தை எடுக்கும் என்று பெரும் எதிர்பார்ப்பில் இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அதீத நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபையானது இன்று திங்கட்கிழமை கூடவுள்ள நிலையில் இலங்கைக்கு 290 கோடி டொலர்கள் வழங்குவது தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நாம், சர்வதேச நாணய நிதியத்துடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளோம். அதில் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றோம்.

குறிப்பாக, சர்வதேச நாயண நிதியத்துடனான ஆரம்பகட்டப் பேச்சுகளில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற பேச்சுக்களில் பணியாளர் மட்ட ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன்பின்னர் எமக்கான நிதி வழங்குவதற்குரிய வரையறைகளை படிப்படியாக முன்னெடுத்துள்ளோம்.

அத்துடன், இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட பெரும் கடன் வழங்குநர்கள் கடன்மறுசீரமைப்பு உறுதிப்பாட்டுக் கடிதத்தை வழங்கியுள்ளார்கள்.

அவ்விதமான செயல்பாடுகளின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக்கொள்வதற்கான அனைத்து செயல்பாடுகளையும் முறையாக பூர்த்தி செய்துள்ளோம்.

அந்த அடிப்படையில் நிறைவேற்றுக் குழுவானது இலங்கையின் விடயங்களை ஆராய்ந்து சாதகமான தீர்மானத்தை எடுக்கும் என்று நம்பிக்கை உள்ளது - என்றார். (ஐ)

# கண்டி பெண் கொலை இராணுவ சிப்பாய் கைது!



கொழும்பு, மார்ச் 20
கண்டியில் வயல்வெளியில் சேற்றில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட தனுகா மதுவந்தி என்ற 26 வயது பெண் பாலியல் பலாத்காரத்தின் பின்னரே கொலை செய்யப்பட்டார் என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் அவர் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸாரின் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில், அங்கவீனமுற்ற இராணுவ சிப்பாய் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கொலையைச் செய்தாரா என்பதை உறுதிப்படுத்த அவரின் மரபணு மாதிரிகள் மற்றும் இறந்த பெண்ணின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட மரபணு மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ சிப்பாயின் விரல் நகங்கள் மற்றும் சாரத்தில் சேறு படிந்திருந்த நிலையில் அவர் மீதான சந்தேகம் வலுப்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், சந்தேகநபரான இராணுவ சிப்பாய் தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

சந்தேகநபர் கண்டி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# ரணில் - ராஜபக்ஷவை விரட்டி சஜித்தை ஜனாதிபதியாக்குவோம்!

## ஹிருணிகா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 20
"ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷவை பெண்கள் சக்தியே வெளியேற்றியது. இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பு முக்கிய இடத்தை வகித்தது. எனவே, ரணில் - ராஜபக்ஷவை விரட்டுவதற்கான ஆட்டத்தையும் விரைவில் ஆரம்பித்து, சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்குவோம்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்தார்.

தலவாக்கலை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், "சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலுக்கு முகங்கொடுக்க முடியாது. ஏனெனில், தோல்வி உறுதியாகியுள்ளது. அதனால்தான் தேர்தலை



பிற்போடும் முயற்சியில் ஆளுங்கட்சி இறங்கியுள்ளது.

தேர்தல் இல்லை என்பதற்காக நாம் ஓர் அடியேனும் பின்வாங்கிவிடக்கூடாது. அவ்வாறு நடந்தால் ஏனைய கட்சிகள் இரு அடி முன்நோக்கி நகரக்கூடும். எமது பிரசாரத்தை தொடர வேண்டும். நாளொன்றுக்கு 5 புதிய வாக்காளர்களையாவது நாம் எம் பக்கம் இழுக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க எந்நேரத்தில் எந்த முடிவை எடுப்பார் என்று தெரியாது. சிலவேளை அவசர தேர்தலொன்றுக்கு செல்லலாம். தேர்தல் இல்லையென நாம் ஒதுங்கியிருந்தால் அவ்வேளையில் எமக்கு சிக்கல் ஏற்படும். எனவேதான் தயார் நிலையில் இருக்குமாறு கோருகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்கவை தமிழ், முஸ்லிம் மக்களும் நம்பினர். ஆனால் ராஜபக்சக்களை காப்பாற்றப்போய் அவர் அந்த நம்பிக்கையை இழந்துவிட்டார். தற்போது மக்கள் மனம் வென்ற ஒரே தலைவர் சஜித் பிரேமதாஸதான். அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லை. வாங்கும் சம்பளத்தை மக்களுக்கே வழங்கிவருகின்றார்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அமைப்பு உள்ளிட்ட பெண்களே விரட்டினர். ரணிலையும் விரட்டுவதற்கான நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம். அது மட்டுமல்ல சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி கதிரையில் பெண்கள் சக்தியே அமர வைக்கும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்." - என்றார். (ஐ)

# மனைவியுடன் தகராறால் வீட்டுக்கு தீ வைத்த கணவன்!

கொழும்பு, மார்ச் 20
மனைவியுடன் ஏற்பட்ட தகராறையடுத்து கணவன் வீட்டுக்கு தீ வைத்த சம்பவம் ஒன்று கொழும்பு - மொறட்டுவையில் பதிவாகியுள்ளது.

மொறட்டுமுல்லை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொல்கொடசிறி மாவத்தை கடலான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் உறவினர் வீட்டிற்கு சென்றபோது, கணவன் வீட்டிற்கு தீ வைத்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தத் தீ விபத்தில் வீட்டில் இருந்த ஏராளமான பொருட்கள் எரிந்து நாசமானதுடன், பாடசாலை செல்லும் இருவரது புத்தகங்களும் தீயில் கருகின.

# அரச பல்கலைகளில் அனுமதி பெறமுடியாத மாணவருக்கான கடன் உதவி மீள ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 20
உயர் தரத்தில் சித்தியடைந்த, அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கு 8 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கும் திட்டத்தை மீண்டும் முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை தவிர, மாணவர்களின் நாளாந்த செலவுக்காக மேலும் 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்தார்.

நாட்டில் கடன் வட்டி 25 வீதத்தை தாண்டியுள்ள நிலையில், வட்டியின்றி குறித்த கடனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக 5,000 மாணவர்களுக்கு இந்த கடன் வசதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கை வங்கியினால் மாத்திரம் வழங்கப்படும் இந்த கடன் வசதி எதிர்காலத்தில் மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் வழங்கப்படும்.

எவ்வாறாயினும், இக்கடன் வழங்கலில் உயர் தர இசற்புள்ளி, எதிர்பார்க்கப்படும் பாடநெறியின் காலத்துக்கு பொருத்தமான மதிப்பு ஆகியனவும் கவனத்தில் கொள்ளப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

## யாழில்...

தொலைவில் தமிழ் பௌத்தத்துக்கான எச்சங்கள் 3 இடங்களில் காணப்படு கின்றன. அவை 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமே தொல்பொருள் சின்னங்களாக வர்த்தமானி யிடப்பட்டன.

இந்த நிலையில் கடற்படையினரால், வெடியரசன் கோட்டைக்கு அருகிலுள்ள பௌத்த ஸ்தானத்துக்கு அண்மையாக சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் தகவல் பதாகை, வைக்கப்பட்டுள்ளது.

அதில் வரலாற்றை திரிவுபடுத்தும் விதமான தகவல்கள் காட்சிப்படுத் தப்பட்டுள்ளன.

'சிங்கள பிராகிருத மொழி எழுத்து இங்கு உள்ளதாகவும், சிங்கள - பௌத் தத்துக்குரிய எச்சம் காணப்படுவதாக வும்' அந்தத் தகவல் பதாகையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

ஆனால், அது தவறானது என்றும் வரலாற்றை திரிபுபடுத்துவதாகவும், முன்னாள் வரலாற்றுத்துறை பேராசி ரியர் ப. புஸ்பரட்ணம் சுட்டிக்காட்டு கின்றார்.

'அங்கு காணப்படுபவை 14 - 15ஆம் ஆண்டு நூற்றாண்டுக்குரிய தமிழ் மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக் கள். சில தமிழ்ச் சொற்களை எழுது வதற்கு கிரந்த எழுத்துக்களைப் பயன் படுத்தியிருக்கின்றார்கள். கல்வெட்டு மூலாதாரத்திலிருந்து அங்கு எழுப்பப் பட்ட பௌத்த ஸ்தானம் தமிழருக்கு ரியது என்பது தெரிய வருகின்றது' என்று புஸ்பரட்ணம் தெரிவிக்கின்றார்.

இதேவேளை- அங்கு வைக்கப்பட்ட தகவல் பதாகையை தொல்பொருள் திணைக்களமே நட்டுள்ளதாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை தொல்லியல் திணைக்களம் முற்றாக மறுத்துள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலகம் மற் றும் பிரதேச சபை என்பனவும் அதனைத் தாம் வைக்கவில்லை என்று மறுத்துள் ளன.

இதற்கிடையில் இலங்கைக் கடற் படையினர், தாம் நட்டுள்ள அந்தத் தக வல் பலகையை அகற்ற வேண்டாம் என நெடுந்தீவு பிரதேச சபையிடம் கோரி யுள்ளதாக தவிசாளர் நல்லதம்பி சசிக்குமார் தெரிவித்துள்ளார்.

முறையான அனுமதிக்கு விண்ணப் பிக்கும்போது, தகவல் பலகையிலுள்ள விடயங்கள் சரியானவையா என்று தொல்பொருள் திணைக்களத்திடம் உறுதிப்படுத்திய பின்னரே காட்சிப் படுத்த அனுமதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை- கடற்படையின் பேச்சாளர் இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில்,

இலங்கை அரசாங்கத்தால் புராதன முக்கியத்துவம் வாய்ந்த இடமாக வர்த்தமானி அறிவித்தலில் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் வெடியரசன் கோட்டையில், எந்த வொரு சட்டவிரோதமான நடவடிக்கை களையும் கடற்படையால் முன்னெடுக்க முடியாது. வெடியரசன் கோட்டையில் ஏற்கெனவே வைக்கப்பட்டிருந்த அறி வித்தல் பலகை சில தரப்பினரால் அகற் றப்பட்டுள்ளது. அதனை யார் செய்தார் கள்என்று எனக்குத் தெரியாது.

யாழ்ப்பாணத்தில், தொல்பொரு ளியல் திணைக்களத்தின் பணிமனைகள் ஏதும் இல்லாத காரணத்தால் அறிவித் தல் பலகையை மீண்டும் அதே இடத் தில் வைக்குமாறு எமக்கு அறிவுறுத்தப் பட்டது. அதற்கேற்ப அறிவித்தல் பலகை வைக்கப்பட்டது. தற்போது சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் வைக்கப்பட்டிருக்கும் இந்த அறிவித்தல் பலகைகளை தமிழ் மொழி யிலும் வைக்க 'சம்பந்தப்பட்ட அதிகாரி களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் .- என்று கூறியுள்ளார்.

(ஐ)

## தமிழ்த்தேசிய...

நடைபெற்றது.

இலங்கை தமிழரசு கட்சியின் தலை வர் மாவை சேனாதிராசா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், தமிழ் மக்க ளின் உரிமைகளை வெல்வதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ஒற்றுமையாக பயணிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

அவரின் வலியுறுத்தலை ஏற்று தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பய ணிக்கும் முடிவுக்கு மத்திய குழு இணக் கம் தெரிவித்தது. அத்துடன், ஏற்கனவே திட்டமிட்டவாறு உள்ளூராட்சி தேர்த லின் பின்னர் சக தமிழ்த் தேசியக் கட்சி களுடன் இணைந்து பய ணிக்கவே முடிவு செய்யப்பட்டது என்ற விடயமும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து, இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவு குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. தமிழரசு கட்சி களின் கிளைகளுக்கான தெரிவு நடை பெற்றதும் பொதுக் கூட்டத்தைக் கூட்டி தலைவர் தெரிவை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.சிறிதரன், த. கலையரசன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பா. அரியநேந்திரன், ஞா. சிறிநேசன், சீ. யோகேஸ்வரன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, யாழ். மாநகர முன்னாள் முதல்வர் இ. ஆனல்ட், மட்டக்களப்பு மாநகர முதல்வர் சரவண பவன், இளைஞரணி தலைவர் கி.சேயோன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## இலங்கைக்கான...

வெளியிட்டுள்ளார்.

மேலும், எட்டப்பட்ட 290 கோடி டொலர் தொகையில் 33 முதல் 35 கோடி டொலர்கள் முதல் கட்டமாக நாளை மறுதினம் விடுவிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கடன் தொகையை மத்திய வங்கியின் அந்நிய செலாவணி கையிருப்பை பலப்படுத்த மட்டுமே பயன்படுத்த முடியும். வேறு நட வடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாது என்றும் அறியவருகின்றது. (ஐ - சி)

## 2048 இல்

நாடாக இல்லை. அபிவிருத்தியடைந்து வரும் நாட்டை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் அனைவரும் காண முடி யும் எனவும், பிராந்தியத்தில் மிகவும் வளமான நாடாக இலங்கையை மாற்ற, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தினால் மட்டும் போதாது எனவும், அதற்கு பொருளாதாரமும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

2048 ஆம் ஆண்டளவில் இலங் கையை வளமான நாடாக மாற்றுவதற் கான 25 வருட திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய இளைஞர்களின் அர்ப்ப ணிப்புடன் மட்டுமே அதனை அடைய முடியும்.

நான் றோயல் கல்லூரியில் ஆரம்பப் பள்ளியில் படிக்கும் போது, ஆசியாவி லேயே இரண்டாவது வளமான தேச மாக நாங்கள் இருந்தோம். முதலில் ஜப் பான், அடுத்தது இலங்கை. இன்று மற்ற எல்லா நாடுகளும் நம்மை மிஞ்சிவிட் டன.

இப்போது எனது நோக்கம் கடனை மறுசீரமைப்பது மட்டுமல்ல, பொரு ளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான அடித்தளம் அமைப்பதும் அல்ல, அதன் மூலம் நமது கடனை பத்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த முடியும்.

அடுத்த 40-50 ஆண்டுகளில் வாழ்ப வர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங் கும் வளமான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதே எனது நோக்கம். நாடு ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்கிறது. எனினும், ஏனைய வளமான நாடுகளைப் போன்று மேலதிக உபரியை நாட்டில் உருவாக்குவதே இறுதி இலக்காகும் - என்றார். (ஐ)

# 7,000 ஆசிரியர்கள் மீண்டும் வேலை நிறுத்தம் செய்வர்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 20

தேசிய பாடசாலை ஆசிரியர் இட மாற்ற சபையை கலைக்கும் திடீர் தீர் மானத்துக்கு அரசாங்கம் தீர்வு வழங்கத் தவறினால் தொழில்சங்க நடவடிக்கை யில் ஈடுபடுவோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

ஆசிரியர் இடமாற்ற சபையை கலைக்கும் தீர்மானத்துக்கு எதிராக ஏழு பாடசாலைகளின் அதிபர்கள் முறைப் பாடு செய்துள்ளனர். இது தொடர்பான கலந்துரையாடல் கல்வி அமைச்சில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள தாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் கலந்துரையாடு வதற்காக கல்வி அமைச்சர் அனைத்து ஆசிரியர் சங்கங்களையும் அமைச்சுக்கு அழைத்துள்ளார் என்றும் கூட்டத்தில் ஒருங்கிணைந்த முடிவு எடுக்கப்படா விட்டால், 7 ஆயிரம் ஆசிரியர்களின் ஆதரவுடன் தொழில்சங்க போராட் டத்தில் ஈடுபடுவோம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

(ஐ)

## விபத்தில் சிறுவன் பலி

கொழும்பு, மார்ச் 20

மூவர் பயணித்த மோட்டார் சைக் கிள் கட்டுப்பாட்டை இழந்து கால்வா யில் வீழ்ந்ததில் அதனை செலுத்திச் சென்ற15 வயது சிறுவன் உயிரிழந்தார்.

கல்கமுவையில் நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் மூவரும் படுகாய மடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

## உள்ளூராட்சி சபை...

சபைகளின் பதவிக்காலம் நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

இனி உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை நீடிக்க உள்ளூராட்சி அமைச்சருக்கு அதிகாரம் இல்லை. இத னால், 29 மாநகர சபைகளின் அதிகாரம் மாநகர ஆணையாளர்களின் கீழும், 36 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபை களின் அதிகாரம் செயலாளர்களின் கீழும் இயங்கவுள்ளன. (ஐ)

## திருமலையிலும்...

திருகோணமலையில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் குமரன் கடவை, திம்பிரிவெவ பகுதிகளில் 3.0 ரிச்டர் அளவில் நில அதிர்வு பதிவானது.

இதேவேளை, அம்பாந்தோட்டை யின் கிரிந்த பலாட்டுபான பகுதியில் 2.6 ரிச்டர் அளவில் நில நடுக்கம் பதிவானது.

இந்த நில அதிர்வுகளால் மக்கள் அச் சம் கொள்ளத் தேவையில்லை என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணி யகப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

## சிறுமி மீது...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

நேற்றைய தினம் சிறுமிக்கு மது பானத்தை வலுக்கட்டாயமாகப் பருக் கிய ஒருவர் அவரை வன்புணர்ந்தார் என்றும் பின்னர் அந்த சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக பொலிஸாரே மருத்துவமனையில் சேர்ப் பித்திருக்க வேண்டும். ஆனால், அவர் கள் சிறுமியின் தாயாரை மருத்துவமனை யில் சேர்ப்பிக்குமாறு கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

நேற்று இரவு 8 மணி வரை யாழ். போதனா மருத்துவமனையிலோ அல் லது தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனையிலோ சேர்ப்பிக்கப்படவில்லை. இந்த நிலையில், இதுபற்றி அறிந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பணிமனை சிறுமியை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துமவனையில் சேர்ப்பிக் குமாறு அச்சுவேலி பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டது. (ஐ)

## அன்னை...

கூட்டம் ஆரம்பமானது.

இந்த நிலையில், அன்னை பூபதியின் நினைவிடத்தில் அவரின் பிள்ளைகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவரான அன்னை பூபதி உடன டியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து 1988 ஆம் ஆண்டு மார்ச்19ஆம் திகதி மாமாங் கப் பிள்ளையார் ஆலய முன்றலில் உண் ணாவிரத போராட்டத்தை ஆரம்பித் தார். தண்ணீரை மட்டுமே அருந்திய வாறு 31 நாட்கள் போராடிய அவர் 19.04.1988 அன்று உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாகாண...

தொல்லியல் இடங்கள் தொல் பொருள் திணைக்களம் மற்றும் எமது நிலங்கள் வனவளத் திணைக்களம் உள்ளிட்டவை களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இதற்கு தற்போது, மாகாணங்களில் அதிகாரம் செலுத்தும் ஆளுநர்களும் துணைபோகின்றனர்.

மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்து 5 வருடங்களாகின்றன. இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே உறுதியளித்துள்ளார் மாகாணங்களுக்கு அதிகாரங்களை தரு வது என்று. இதன்படி, உடனடியாக பழைய விகிதாசார முறைப்படி தேர் தலை நடத்த வேண்டும் என்று அவரை கோருவது என்றும் தமிழரசு கட்சி முடிவு எடுத்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தவாறு 1985 ஆம் ஆண்டு காணிகளின் எல்லைகள் எவ்வாறு இருந்தனவோ அதே எல்லை களின் பிரகாரமே மீளவும் நிர்ணயிக் கவும் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

## உள்ளூராட்சி...

எனவும் முறையான குழு ஒன்றை நிய மித்து தனக்கு அறிக்கை தருமாறும் அந் தக் கட்சியின் மூத்த தலைவரும் திரு கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் கோரியிருந்தார்.

அவர் இந்தக் கூட்டத்தில் பங்கேற் காத போதிலும் கட்சி தலைவர் மாவை சேனாதிராசா மூலமாக இந்தத் தகவலை மத்திய குழுவுக்கு அறிவித்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட உள்ளூ ராட்சி வேட்பாளர் தெரிவு, கனடாவி லிருந்து வந்துள்ள குகதாசன் - எம். ஏ. சுமந்திரன் தரப்பின் மேற்பார்வையில் நடத்தப்பட்டதாகவும், இரா.சம்பந்த னின் சிபாரிசுகள் நிராகரிக்கப்பட்டன என்றும் இதானால் சம்பந்தன் கடுமை யான அதிருப்தியடைந்தார் என்றும் ஏற்கனவே செய்திகள் வெளியாகி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## நிதி அமைச்சின் செயலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

### ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 20

தேர்தலுக்கு பணம் வழங்காத நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி ஊடாக பதிவுத் தபாலில் கடிதம் ஒன்றை அனுப்பி நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தனவுக்கு அவர் இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலை 2023 மார்ச் 14ஆம் திகதி முதல் தவணை முறையில் வழங்குமாறு 2023ஆம் ஆண்டு மார்ச் 7 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2023 பெப்ரவரி 13 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தேவையான பணத்தை விடுவிக்க முடியாது எனவும், பணத்தை விடுவிப்பதற்கு நிதி அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் பதில் கடிதம் மூலம் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

பணத்தை மட்டுப்படுத்துவதற்கான அமைச்சரவை தீர்மானம் மற்றும் ஒரே நேரத்தில் பணத்தை வழங்குவதில் உள்ள சிரமங்கள் குறித்த விபரங்களை நிதியமைச்சின் செயலாளர் சத்தியக் கடதாசியாக சமர்ப்பித்ததையும் இது காட்டுகிறது.

இவ்வாறு, நிதியமைச்சின் செயலாளர் உயர் நீதிமன்றத்தை அவமதித்து, அரசியலமைப்புச் சட்டத்தின் 105 ஆவது பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்திருப்பதால், நீதிமன்ற அவமதிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மதுபானம் அருந்துவோரின் எண்ணிக்கை குறைகிறது!

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் மதுபானம் அருந்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.2023ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் இந்த நாட்டின் கலால் வரி வருமானம் 350 கோடி ரூபாயால் குறைவடைந்து என்று கலால் திணைக்கள அறிக்கை யின் ஊடாக தெரியவந்துள்ளது.

2022ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் கலால் வரி வருமானம் 2,860 கோடி ரூபாயாகும். எனினும், 2023 ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் 2,510 கோடி ரூபாய் மட்டுமே வருமானமாக கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் கலால் வருமான வரி ஆதாயம் இவ்விரண்டு மாதங்களிலும் 12.2 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. (ஐ)

## திருமண நிகழ்வில் மோதல் ஒருவர் பலி; ஐவர் படுகாயம்!

கொழும்பு, மார்ச் 20

களுத்துறையில் திருமண வைபவம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதில் ஒருவர் உயிரிழந்தார். 5 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை - அங்குருவாதொட்ட - பட்டகொட சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதில், உயிரிழந்த நபரின் சடலம் நேற்று அதிகாலை படகொடை வயல் வெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் பட்டகொட யதவர பிரதேசத்தை சேர்ந்த மங்கள பிரேமவர்தன என்ற 36 வயதுடையவரே உயிரிழந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த இரு குழுக்களை சேர்ந்த 5 பேர் கொழும்பு, நாகொடை மற்றும் ஹொரணை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பட்டகொட பிரதேசத்தில் திருமண வைபவம் ஒன்றின் போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி படகொட சந்தியில் மோதல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. அங்குருவாதொட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கு அழிவையே மிகுதியாக்கினார்!

## பொதுஜன பெரமுனவே சாடுகிறது



கொழும்பு, மார்ச் 20

**நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ செயல்படவில்லை. நாட்டுக்கு அழிவையே மிகுதியாக்கினார். ஆகவே, அவர் பதவி விலகியதையிட்டு நாங்கள் கவலையடையவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினரான அவர் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.**

சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்றுவதை கட்டாயமாக்கும் வகையில் 2020ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் பாராளுமன்றத்தில் உறுதியான தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

ஒரு மாணவன் தனது தாய்மொழியில் கல்வி கற்பதற்கு அரசமைப்பின் ஊடாக உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமையை மறுக்கும் வகையில் தான் 2020ஆம் ஆண்டு சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இந்தத் தீர்மானத்தால் சாதாரண மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சட்டக் கல்லூரி பரீட்சை மொழி தொடர்பான பிரச்னைக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்க வேண்டும்.

இந்தத் தவறை பாராளுமன்றத்தின் ஊடாக திருத்திக்கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆகவே, சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் தான் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானியை பாராளுமன்றத்தின் ஊடாக இரத்து செய்ய சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வர நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். சிறந்த மாற்றத்தை எதிர்பார்த்தோம். ஆனால், எதிர்பார்ப்புக்கள் ஏதும் நிறைவேறவில்லை.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்றவில்லை. முறையற்ற வகையில் செயல்பட்டார். நாட்டுக்கு அழிவை மாத்திரம் மிகுதியாக்கினார். ஆகவே, இரண்டரை வருடகாலத்தில் மக்கள் போராட்டத்தால் அவர் பதவி விலகியதையிட்டு நாங்கள் கவலையடையவில்லை - என்றார். (ஐ)

# பெருந்தொகை எரிபொருளுடன் பயணித்த ரயில் தீப்பற்றியது!

## புகையிரத ஊழியர்களால் சேதம் தவிர்ப்பு




மட்டக்களப்பு, மார்ச் 20

கொழும்பில் இருந்து 3 இலட்சம் லீற்றர் எரிபொருட்களை ஏற்றிவந்த ரயிலில் ஏற்பட்ட தீ புகையிரத ஊழியர்களின் முயற்சியால் பெரும் சேதத்தில் இருந்து காக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் 8 கொள்கலன்களுடன் புறப்பட்ட ரயில் சனிக்கிழமை காலை 09.10 மணியளவில் வெலிக்கந்தை புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்டது. புறப்பட்ட 20 நிமிடத்தில் 188 ஆவது மைல் கல் அருகில் புகையிரத இயந்திர பகுதியில் தீப்பற்றியது.

புகையிரத வீதி திருத்த வேலையில் ஈடுபட்ட ஊழியர்கள் இதனை அவதானித்து ரயிலை தடுத்து நிறுத்தினர். இதனால் பெரும் அபாயம் தவிர்க்கப்பட்டது.

இதனையடுத்து மட்டக்களப்பு புகையிரத நிலைத்தில் இருந்து மற்றுமொரு ரயில் இயந்திரம் கொண்டுவரப்பட்டு எரிபொருள் நேற்று முன்தினம் மதியம் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ஐ)

## மீன்பிடிக்க சென்றவர் படகிலேயே உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 20

சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் படகுக்குள் உயிரிழந்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த மீனவர் கடந்த பெப்ரவரி திக்ஓவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து மேலும் ஐவருடன் கடற்றொழில் நடவடிக்கைக்காக கடலுக்கு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஏற்பட்ட சுகயீனம் காரணமாக கற்பிட்டியை சேர்ந்த 65 வயதான குறித்த மீனவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## வாகனங்களை இறக்குமதிக்கு அனுமதி கோரி கலந்துரையாடல்!

கொழும்பு, மார்ச் 20

வாகனங்களை மீண்டும் இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் இலங்கை மத்திய வங்கியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தற்போதைக்கு அனுமதி வழங்க முடியாது என வங்கி ஆளுநர் கலந்துரையாடலில் தெரிவித்ததாக சங்கத்தின் தலைவர் என்.கே.கமகே தெரிவித்தார்.

இந்நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியால், வாகன இறக்குமதி 2021 மே 24 அன்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.